விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 123 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 07 சனிக்கிழமை (20.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்ள நடவடிக்கை

## உலக வங்கியின் பிரதிநிதி வாக்குறுதி





(வோஷிங்டன்)

இலங்கை நிதித்துறையின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளிப்பதோடு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என உலக வங்கியின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய துணைத் தலைவர் ரிக்கார்டோ உறுதியளித்துள்ளார்.

வோஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம்/உலக வங்கியின் வசந்தகாலக் கூட்டத்தின் போது, இராஜாங்க நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் 16

## எதிர்வீரசிங்கம் காலமானார்


15

### கிளிநொச்சியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள கிராம சேவையாளர் அலுவலக வளாகத்தில் இருந்தே மீட் 15

## மீனவர் விவகாரம் தொடர்பில் பேச ஸ்டாலினிடமிருந்து அழைப்பு

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு





(கிளிநொச்சி)

மீனவர் விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை மேற்கொள்ள தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடமிருந்து அழைப்பு வந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் 15

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதியின் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் படைகளின் அத்துமீறிய செயற்பாடுகளிற்கு எதிராக உண்ணா விரதமிருந்து தன்னுயிர் நீத்த தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 15



## மதங்களை அவமதிக்க குழு உருவாகியுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

பௌத்தம் உள்ளிட்ட அனைத்து மதங்களையும் பின்பற்றும் நாட்டின் குடிமக்களையும் அவர்களின் மதத்தைப் பின்பற்றும் உரிமையைப் பறிக்கும் ஒரு பிரிவினர் தற்போது நாட்டில் 15

## அநுர, சஜித் போன்றவர்களால் நாடு கட்டியெழுப்பப்படாது

### வஜிர அபேவர்த்தன எம்.பி



(கொழும்பு)

அநுர, சஜித் போன்றவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதால் அவர்கள் அனைவரும் ஜனாதிபதியின் பயணத்தில் இணைந்து கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசி 15

## நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்!

### எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம்

(கொழும்பு)

இன்று முதல் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரி காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடிய ஆபத்துள்ளது என்று அந்தச் சங்கத்தின் 16

## கல்வி நிர்வாக சேவை III 735 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை III மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களிடமிருந்து சித்தியடைந்தவர்கள் 16

## மின்கட்டணத்தை குறைப்பதே மின்சார சட்டமூலத்தின் நோக்கம் - எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

புதிய மின்சார சட்டமூலத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாட முடியும் எனவும் மின் கட்டணத்தைக் குறைப்பதே புதிய மின்சார சட்டமூலத்தின் நோக்கம் எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பளம் இயங்குவதில் எனக்கு திருப்தி இல்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

ஆனையிறவு உப்பளம் இயங்குவதில் எனக்கு திருப்தி இல்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வினவப்பட்ட கேள்விக்கு பதலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனையிறவு உப்பளத்தை அரசாங்கம் பொறுப்பெடுத்து இயக்குகின்றது. அதில் எனக்கு திருப்தி இல்லை. அதனை மேம்படுத்த வேண்டும்.

அத்துடன், பரந்தன் இரசாயன தொழிற்சாலை, யுத்தத்தினால் முழுமையாக செயலிழந்துள்ளது.

அதனை இயக்குவதற்கு ஏற்றதாக இல்லை. அடுத்து வரும் காலங்களில் குறித்த தொழிற்சாலையையும் மீள இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (ம-7,10)

# முத்துக்குமாரசுவாமிகளின் மறைவு சைவ மக்களுக்கு ஈடில்லாத இழப்பு

## கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவ கால பிரதம குருவும் சிறந்த வேதவித்தகருமாகிய வடகோவை ப.முத்துக்குமாரசுவாமிகளின் மறைவானது சைவசமயத்தவர்களுக்கு ஈடில்லாத இழப்புஎன தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவ கால பிரதம குருவும் சிறந்த வேத வித்தகருமாகிய வடகோவை ப.முத்துக்குமாரசுவாமிகளின் மறைவுச் செய்தியறிந்து மிகுந்த கவலையடைகிறேன்.

சிவாகம நெறிகளை நன்கு கற்ற பெருமகன் இந்தியாவில் குருகுலக் கல்வியும் பட்டப்படிப்பும் நிறைவு செய்து, தனது தந்தையின் வழியில் பல ஆலயங்களின் கும்பாபிஷேகத்தை நெறிப்படுத்தியுள்ளார்.

ஆலயக் கிரியை நெறிகளில் தெளிந்த அறிவுடைய குருவாக விளங்கியதோடு நற்பண்புகள் நிறைந்த மனிதனாக எல்லோராலும் மதிக்கப்பட்டவர். அன்னாரது மறைவு சைவசமயத்தவர்களுக்கு ஈடில்லாத இழப்பாகும். குருக்களின் ஆத்மா சாந்தி பெற அனைவரும் பிரார்த்திப்போம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# உயிர்காப்பு நீச்சல் பிரிவு

## காங்கேசன்துறையில் உருவாக்கம்

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை பகுதியில் பொலிஸாரினால் பிராந்திய உயிர்காப்பு நீச்சல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் உருவாக்கப்பட்ட நிலையத்தை வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக்.சி.ஏ.தனபால நேற்று திறந்து வைத்தார்.

கடற்கரையில் குளிக்கும் போது, விளையாட்டுக்களில் ஈடுபடும்போது உயிர் இறப்பு மற்றும் அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுக்கும் வகையில் குறித்த பிரிவு செயற்படவுள்ளது.

இதன்போது அப்பகுதியில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் காவலரணும் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-7,10)


இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | | |
|---|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 | விசேட விலைக் கழிவு |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 | |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 | |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 | |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 | |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 | |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1185~~ | 900 | |

(507)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433
288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494


# 17 ஆமைகள் கடத்தல்

## மட்டக்களப்பில் இருவர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக 17 ஆமைகளை கடத்திய குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று திருகோணமலையைச் சேர்ந்த 2 நபர்கள் மட்டக்களப்புக்கு வந்து மட்டக்களப்பு பிரதேசத்தில் குறித்த ஆமைகளை சட்டவிரோதமான முறையில் பிடித்து இறைச்சிக்காக 10 ஆமைகளை அறுத்த நிலையிலும் ஏழு ஆமைகளை உயிருடனும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ம-7,10)


அஞ்சலி செய்கின்றோம்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின்
மகோற்சவ ஆதீன பிரதம குருமணி சாகித்திய சிரோன்மணி

சிவஸ்ரீ
வை.மு.ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்

அவர்கள் அம்பாளின் பாதக்கமலங்களைச் சரணடைந்தார். அன்னாரின் ஆத்மா அன்னையின் திருவடியில் பூரணானந்த முத்தி பெற பிரார்த்தனை செய்வதோடு இவ்வுலக வாழ்வில் அன்னாரின் மறைவையிட்டு வருந்தி நிற்கும் குடும்ப உறவுகளின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயருறும்
ஸ்ரீ நாகபூ...
நயினாதீவு.
(C-0173)


# யாழ். பல்கலைக்கழக நிதியாளருக்கு எதிராக

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எதிராகப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் முன்னாள் தலைவர் திருமதி துஷானி சயந்தன், பல்கலைக்கழகச் சட்டத்துக்கு விரோதமான முறையில் நிதியாளர் தனது சம்பளத்தை நிறுத்தியதனால் தனது வாழ்வாதாரம் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஏழாண்டு விடுமுறையை நிறைவு செய்துகொண்டு குறிப்பிட்ட திகதியில் தான் கடமைக்குத் திரும்பிய போதிலும் தனக்கு அரை மாதச் சம்பளத்தை வழங்கி விட்டு எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குத் தனது வாழ்வாதாரத்தைச் சவாலுக்குட்படுத்தும் வகையில் தனது சம்பளத்தை நிறுத்தியமை தவறு என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பாணப் பிராந்திய அலுவலகம் முன்னெடுத்துள்ளது.

இதேநேரம், வருமான வரி முன்மொழிவின் போது பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்ற பல வருமானத்தை மறைத்து வரி ஏய்ப்புச் செய்துள்ளார் எனக் கைதடியைச் சேர்ந்த கே. சிவரஞ்சன் என்பவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (ம-7,10,33)


கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக நிதிக் கிளையில்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக
கடமையாற்றும் திருமதி அனோஜன் அர்ச்சனா
அவர்களுடைய அன்புத் தந்தையார்

அமரர் கணபதிப்பிள்ளை
சிவராஜா

அவர்கள் 17.04.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

பிறப்பு 05.01.1955 மறைவு 17.04.2024
(C-0172)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதியின் 36 ஆவது நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு





(யாழ்ப்பாணம்)
தியாக தீபம் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு-கிழக்கில் அனுஷ்டிக்கப்பட்டது. நினைவேந்தலில் கலந்து கொண்டோர் மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்ததுடன் அடையாள உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டனர். (நி-6-33-316)

# போர் பதற்றத்தால் உலக சந்தையில் அதிகரிக்கும் எரிபொருள் விலைகள்

**(வோஷிங்டன்)**

**ஈரான் பகுதியில் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக வெளியான தகவலை அடுத்து, உலக சந்தையில் எரிபொருள் மற்றும் தங்கத்தின் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதன்படி நேற்று வெள்ளிக்கிழமை ஆசிய சந்தைகளில் ப்ரெண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய்க்கு 3% உயர்ந்து 90 டொலராக உள்ளது. அதே நேரத்தில் தங்கம் ஒரு அவுன்ஸ் 2,400 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது

மேலும் ஜப்பான், ஹொங்காங், தென்கொரியா ஆகிய நாடுகளில் பங்குச்சந்தை சரிந்துள்ளதாகவும், மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் போர் குறித்து பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை

(கொழும்பு)

விசேட மற்றும் சிறுவர்களுக்கான மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் ஏனையோர் வெளிநாடுகளில் பயிற்சிக்கா சென்றுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுக்குப் பயிற்சிக்காக சென்ற சில வைத்தியர்கள் தற்போது நாடு திரும்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான வைத்தியசாலைகளில் விசேட வைத்தியர்கள் இன்மையால் நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# அருட்தந்தை சிறில் காமினி

## குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம்

(கொழும்பு)

கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக அருட்தந்தை சிறில் காமினியை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வருகை தருமாறு ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி தற்போது அவர் நேற்றுக் காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மைகள் தனக்கு தெரியும் என்றும் எனவே அது தொடர்பாக விசாரிப்பதற்கு அழைக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப் பிட்டிருந்ததாக அருட்தந்தை சிறில் காமினி மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இளநீர் செய்கையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை இளநீருக்கு சர்வதேச சந்தையில் காணப்படும் கேள்விக்கு அமைய இளநீர் செய்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் 85 இளநீர் உற்பத்தி கிராமங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு, புதிய இளநீர் வகைகளை செய்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# சு.க.வின் உட்பூசலை தீர்க்க எமக்கு அதிகாரம் இல்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் உள்ளக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமது ஆணைக்குழுவுக்கு எவ்வித சட்ட ரீதியான அதிகாரமும் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அக்கட்சியின் அரசியல் குழுவினால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் அதன் உறுப்பினர்களால் நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்சியின் புதிய நியமனங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்களை துமிந்த திஸாநாயக்க தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்ததையடுத்து, கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால புதிய நியமனங்கள் தொடர்பாக ஆணைக்குழுவில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்தார். (நி-6)

# ஐ.நாவில் இலங்கையருக்கு கிடைத்த உயர்பதவி

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகளின் மூலதன நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளராக கலாநிதி பிரதீப் குருகுலசூரிய நியமிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நிபுணர் குருகுலசூரிய அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

ஐக்கிய நாடுகளின் மூலதன நிதியத்தில் இணைவதற்கு முன், அவர் சுற்றுச்சூழல் [illegible] கான ஐக்கிய நாடுகளின் [illegible] பாட்டு நிதியத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.

2006 இல் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தில் இணைந்தார் .

அதற்கு முன்னர் உலக வங்கியுடன் இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணி [illegible] (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ராகுல் 'ராஜ்ஜியம்'

## சென்னையை வீழ்த்தியது லக்னோ



ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஏமாற்றிய சென்னை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியிடம் தோல்வி யடைந்தது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது.

லக்னோவில் நடந்த லீக் போட்டியில் லக்னோ - "நடப்பு சம்பியன்" சென்னை அணிகள் மோதின.

நாணயச் சுழற் சிழயில் வென்ற லக்னோ அணித் தலைவர் ராகுல் களத் தடுப் பை" தேர் வு செய்தார்.

சென்னை அணி வீரர் கள் ஆரம்பத்தில் தடுமாறினர். மொசின் கான் "வேகத்தில்" ரச்சின் ரவிந்திரா (0) போல டானார். அணித் தலைவர் ருது ராஜ் கெய்க்வாட் (17) நிலைக்க வில்லை. ரகானே (36) ஓரளவு கைகொடுத்தார். ஷிவம் துபே (3), சமீர் ரிஸ்வி (1) சோபிக்கவில்லை.

யாஷ் தாகூர் பந்தை பவுண் டரிக்கு விரட்டிய ஜடேஜா, மொசின் கான் பந்தை சிக்சருக்கு அனுப்பி 34 பந்துகளில் அரைசதம் கடந்தார். பிஷ்னோய் வீசிய 18வது ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் பறக்கவிட்ட மொயீன் அலி (30), அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். மொசின் கான் வீசிய 19ஆவது ஓவரில் வரிசையாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய தோனி, யாஷ் தாகூர் வீசிய கடைசி ஓவ ரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரிகள் அடித்தார்.

20 ஓவர்களில் சென்னை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட் டங்களை எடுத்தது.

ஜடேஜா (57), தோனி (28) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


பந்துவீச்சில் லக்னோ சார்பில் குர்னால் பாண்ட்யா 2 விக்கெட்டுக் களை வீழ்த்தினார்.

**சுப்பர் ஜோடி**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக் - அணித் தலைவர் ராகுல் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. ஜடேஜா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ராகுல் அரைச்சதம் கடந்தார். இவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய குயின்ரன் 41 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். முதல் விக்கெட்டுக்காக134 ஓட்டங் களை சேர்த்தபோது முஸ்தபிஷூர் "வேகத்தில்" குயின்ரன் (54) வெளி யேறினார். அபார மாக ஆடிய ராகுல் (82), பதிரனவிடம் சரணடைந் தார்.



பின் இணைந்த பூரன் - ஸ்டாய் னிஸ் ஜோடி கைகொடுத்தது. துஷார் தேஷ் பாண்டே பந்தை பவுண்டரிக்கு விரட்டிய பூரன் வெற்றியை உறுதி செய்தார். லக்னோ 19 ஓவர் களில் 2 விக்கெட் டுக் களை மாத்திரம் இழந்து 180 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பூரன் (23), ஸ்டாய்னிஸ் (8) ஆட்டமிழக்காமல் இருந்த னர். சென்னை சார்பில்முஸ்தபிஷூர், பதிரன தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (ம-7,10)



பாகிஸ்தான் - நியூசி லாந்து அணிகளுக் கிடையிலான 1ஆவது ரி20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற நிலை யில் கடும் மழை காரணமாக இடையில் கைவிடப்பட்டது.

இதன்போது மைதானத்தை பாதுகாக்கும்பணியல் மைதான ஊழியர் கள் ஈடுபட் டிருந்த போது...

# இலங்கைப் பெண்கள் சாதனை

## 195 ஓட்டங்களை விளாசினார் சமாரி



பெண்கள் கிரிக்கெட்டில் 300 ஓட்டங் களுக்கும் மேல் "சேஸ்" செய்து வெற்றி பெற்ற முதல் அணியானது இலங்கை.

தென்னாபிரிக்கா - இலங்கை பெண்கள் அணிகள் மோதிய மூன் றாவது ஒருநாள் போட்டி தென்னா பிரிக்காவின் போட்செப்ஸ்ட் ரூமில் நடந்தது.

முதலில் களமிறங்கிய தென்னா பிரிக்க அணிக்கு அணித் தலைவர் லாரா (184 ஓட்.*, 147 பந்து), மரி ஜான்னே (36) கைகொடுக்க, 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 301 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணிக்கு விஷ்மி (26), அணித் தலைவர் சமாரி அத்தபத்து ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ஒரு கட்டத்தில் இலங்கை 126/4 ஓட்டங்கள் என திணறியது.

.பின் சமாரி, நிலாக்சிகா இணைந்து வேகமாக ஓட்டங்கள் சேர்க்க, இலங்கை அணி 44.3 ஓவர்களில் 305/4 ஓட்டங்கள் எடுத்து 6 விக் கெட்டுக்களால் வெற்றி பெற் றது.

சமாரி (195 ஓட்., 139 பந்து), நிலாக் சிகா (50) ஆட்டமிழக்காமல் இருந் தனர்.

இதனடிப்படையில் ஒருநாள் தொடர் 1:1 என்ற கணக்கில் சமனி லையானது.

**முதல் இடம்**

ஒருநாள் அரங்கில் "சேஸ்" செய்த போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீராங்கனை ஆனார் சமாரி (195). மெக் லானிங் (152, ஆஸி.,) 2ஆவதாக உள்ளார்.

* ஒட்டுமொத்த ஒருநாள் கிரிக் கெட்டில் "சேஸ்" செய்த போது அதிக ஓட்டம் எடுத்தவர்களில் சமாரி இரண் டாவது இடம் பெற்றார். முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் மக்ஸ்வெல் (201, எதிர்-ஆப்கன், 2023) உள்ளார்.

* பெண்கள் ஒருநாள் அரங்கில் சமாரி எடுத்த 195 ஓட்டங்கள், மூன்றாவது சிறந்த ஓட்டங்களாக அமைந்தது. முதல் இரு இடத்தில் அமேலியா (232, நியூசி.,), பெலிண்டா (229, ஆஸி.,) உள்ளனர்.

**புதிய சாதனை**

இதையடுத்து பெண்கள் கிரிக் கெட்டில் 300 ஓட்டங்களுக்கும் மேல் "சேஸ்" செய்து வெற்றி பெற்ற முதல் அணியானது இலங்கை. முன்ன தாக 2012இல் அவுஸ்திரேலிய அணி 289/6 ஓட்., (எதிர்-நியூசி., 288/6) எடுத்து வெற்றி பெற்றிருந் தது. ஆண்கள் கிரிக்கெட்டில் 1992இல் சிம்பாப்வேயை (312/4) வென்ற இலங்கை அணி (313/7), 300 ஓட்டங்களுக்கும் மேல் "சேஸ்" செய்து வென்ற முதல் அணியானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை சம்பளமாக 1,700 ரூபா வேண்டும் கொழும்பில் வெடித்த மாபெரும் போராட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சக்திவேல் தலைமையில் இந்தப் போராட்டம் ஏற்பாடும் செய்யப்பட்டதுடன், பெருமளவான தொழிலாளர்களும், இ.தொ.காவின் ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குமாறு அரசாங்கம் கம்பனிகளிடம் கோரிக்கை விடுத்ததுடன், அமைச்சரவையிலும் இதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

என்றாலும், கம்பனிகள் 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென தொடர்ச்சியாக கூறி வருவதுடன், அரசாங்கத்தின் தீர்மானத்தையும் ஏற்க மறுத்து வருகின்றன.

இதுதொடர்பில் தொழில் அமைச்சு, முதலாளிமார் சம்மேளனம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும் இடையில் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுகளும் தோல்வியிலேயே முடிந்தன.

இதன் காரணமாகவே கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கொழும்பில் பாரிய எதிர்ப்பு போராட்டமொன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னெடுத்தது.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை புறக்கணிக்காதீர், சம்பள விடயத்தில் இழுத்தடிப்பு வேண்டாம், அராஜக கம்பனிகளே தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை கொடு இல்லாவிட்டால் தோட்டங்களை விட்டு வெளியேறு போன்ற பல்வேறு சுலோகங்களை காட்சிப்படுத்திய வாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ( நி-6)

# சஜித் அணியில் இருந்து ரணில் பக்கம் தாவிய உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பெலியத்தைத் தேர்தல் தொகுதி அமைப்பாளர் அக்கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளாரென தெரிவிக்கப்படுகின்றது.

இவர், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் அக்கட்சியின் அங்கத்துவத்தை நேற்று முன்தினம் பெற்றுக் கொண்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சராக கடமையாற்றிய நந்தன அத்தபத்துவின் மகன் பிரவீன் ருவிந்த அத்தபத்து ஐக்கிய மக்கள் சக்தியின் பெலியத்தைத் தேர்தல் தொகுதிக்கான அமைப்பாளராக செயற்பட்டு வந்திருந்தார்.

இந்நிலையிலேயே, அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு சென்று பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தனவிடம் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## பகிடிவதையை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை குறைப்பதற்காக பகிடிவதை எதிர்ப்பு வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்க உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழகங்களில் பகிடிவதை சுமார் 85 வீதத்தால் குறைந்துள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

பகிடிவதை தொடர்பான தண்டனைகளை அதிகரிப்பதன் மூலமும் விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமும் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார். (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலகுவாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

WU MoneyGram. Ria

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


# கண்ணீர் அஞ்சலி

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் விசேட கல்வி ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி. பிறேமினி இரத்தினகாந்தன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்.தவமணிதேவி யோகநாதன்



31.03.2024 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(70)

விசேட கல்விப் பிரிவு,
யாழ்ப்பாணம் கல்வி வலயம், யாழ்ப்பாணம்.

## பொதுக்கூட்ட அறிவித்தலும் வருடாந்த ஒன்றுகூடலுக்கான அழைப்பும்

# இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்-வடமாகாணம்

மேற்படி எமது தொழிற்சங்கத்தின் நிர்வாகசபை தெரிவிற்கான பொதுக்கூட்டமும் வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் 12.05.2024 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 9.30 மணியளவில் யாழ்.காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள திவ்யமஹால் (நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த கூட்டத்திற்கும் நிகழ்விற்கும் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர். (499)

# இராசிபலன்

20.04.2024
சித்திரை 07, சனிக்கிழமை
துவாதசி பின்னிரவு 12.21 மணிவரை

பூரம் பிற்பகல் 3.40 மணிவரை
சுபநேரம்- 3.02-4.32 மணிவரை
இராகுகாலம்-9.02-10.32 மணிவரை

சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்.

வளவன்

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உங்களின் வார்த்தைகளால் காரியம் சாதிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**ரிஷபம்** வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும், பெற்றோர் நலனில் அக்கறை கூடும்.

**சிம்மம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**தனுசு** தொழில் நலன் கருதி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர் மனம் மாறுவர், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**மீனம்** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றாறு ஆயுதமாக் இருக்கும் போது நீர் நிதானமாக ஓடுகிறது.

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

### ஜாதகர்

சிம்ம ராசியின் அதிபதி சூரியன். அவர் 9 ஆம் இடத்தில் உச்சத் தன்மையுடன் ஜொலிக்கிறார். கூடவே குருபகவானும் உள்ளார். நல்ல காலத்திலேயே ரொம்ப பந்தா பண்ணும் நீங்கள் இந்த வருடம் பண்ணுகிற அலப்பறைகளுக்கு வரைமுறையே இல்லாமல் போய்விடும். உங்கள் பூர்வீக பரம்பரை பற்றியெல்லாம் சும்மா அடித்து விடுவீர்கள்.

எல்லோரும் உங்களை மதித்து பணிந்து வணங்க வேண்டுமென அடம் பண்ணுவீர்கள். சில சமயம் உங்கள் செயல்கள் அற்பத்தனமாக தெரியும். அட அவன் என்ன நினைச்சால்என்ன நான்தான் மேன்மை என ஒற்றைக்காலில் நிற்பீர்கள்.

### தனம்

இந்த வருட கிரக நிலைப்படி சிம்ம ராசியினரின் பணம் அத்தனையும் எங்காவது லாக் ஆகிவிடும். அல்லது பணத்தை வாங்கியவர்களால் திருப்பித் தர இயலாமல் போய்விடும். வெளிநாட்டில் ஒளித்து வைத்த பணம், திரும்ப உங்கள் கைக்கு வர தடுமாறும்.

பணத்தை கைக்கு கொண்டு வரும் முயற்சிகள் கடும் தோல்வி அடையும். பணம் மிக பத்திரமாக, மறைவாக இருக்கும். ஆனால் அனுபவிக்க முடியாது. பேப்பரில் சர்க்கரை என எழுதி ருசித்தால் இனிக்குமா அது போல் தான் பண சம்பந்தமான பத்திரங்கள் கையில் இருக்கும் பணம் வராது.

**வாக்கு:** வாக்கு ஸ்தானத்தில் கேது. எனவே உங்கள் சொற்கள் சந்தேகம் நிறைந்து இருக்கும். சில சமயம் ரொம்ப கோபமாக கத்துவீர்கள். இந்த கூப்பாடு உங்கள் இயலாமையினால் வரும். இந்த இயலாமையினால் ஓவராக வெட்டி பந்தா காட்டுவீர்கள்.

**குடும்பம்:** உங்களின் ஒரிஜினல் உண்மை குடும்பமும், இரகசிய குடும்ப செய்தி வெளியே தெரிந்து இரு குடும்பமும் மிக யுத்தம் செய்வார்கள். இவர்களைச் சமாளிக்கவே சிம்ம ராசியினரின் பொழுது சரியாகி விடும்.

இந்த சண்டையை உங்கள் மருமகன் வளர பெருகச் செய்வார். சகோதரம் உங்கள் இளைய சகோதரியின் காதல் விடயம் வெளியே வந்து களேபரம் ஆகிவிடும். அல்லது உங்கள் இளைய சகோதரி அரசியலில் நுழைய அது உங்களுக்கு மகா எரிச்சலைத் தரும். குத்தகை எடுத்தவர்கள் தொகை தராமல் ஏமாற்றுவர். உங்கள் பணியாளர்கள் நிறைய பொய் சொல்வதோடு, வேலையில் சுணக்கம் காட்டுவர். உங்கள் கைபேசி தரும் தகவல் மூலம், உங்கள் வங்கிக் கணக்கு பணம் வழித்தெடுக்கப்படும். சிம்ம ராசியின் 8 ஆம் இடத்தில் இருக்கும் கிரகங்கள் சிம்ம ராசியினரை கும்மி எடுக்கும்.


சிம்மம்

### வீடு

வீடு, வாகன மாற்றம் உண்டு. உங்கள் சொந்த வீட்டை பழுது பார்க்கும் நிலை ஏற்பட்டு அதுவரை வாடகை வீட்டில் தங்கலாம். அல்லது இப்போது இருப்பதைவிட வசதியான வீட்டிற்கு மாறுவீர்கள். சிலர் வாழ்க்கைத் துணையின் வேலையின் பொருட்டு வீடு மாற்றம் ஏற்படும்.

இன்ஸ்டால் மெண்ட்டில் மனை வாங்குவீர்கள். (மொத்த பணம் கொடுத்து வாங்க சரியான நிலைமை இராது). உங்கள் பெற்றோர் உடல் நிலை காரணமாக பூர்வீகம் நோக்கி செல்வர் பள்ளி, கல்லூரி மாணவர்களின் கல்விநிலை ஓரளவு நன்றாகவே இருக்கும். சொந்த முயற்சியில் அறிவுக்கூர்மை பெறுவர். மீனவர்களும், விவசாயிகளும் பங்குதாரர்களால் இம்சை பெறுவர்.

### சந்ததி

இப்போது பிரசவம் ஆகும் பெண்களில் சிலருக்கு அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறக்கும். இந்த தமிழ் புது வருடத்தில், எட்டாமிடத்தில் ராகுவும், ஏழாமிடத்தில் சனியும் இருந்து பெரிய இக்கட்டுகளைக் கொடுக்க முற்படும் போது உங்கள் வாரிசுகள் அரணாக இருந்து காப்பாற்றுவர். இதன் மூலம் சிம்ம ராசியினர் கெத்து குறையாமல் காப்பாற்றப்படுவர். காதல் விடயங்கள் சொல்கிறபடி இல்லை. பங்கு வர்த்தகம் லாபம் வருமா, வராதா என குழம்பும்.

### நோய்

சிறுநீர் பிரச்சினை, மூத்திரக்கல் தோன்றுவது என வலி வரும். இதனால் அடி வயிற்றில் வலி எடுக்கும். உங்களில் நிறைய சிம்ம ராசியினர் அரசு வேலைக்கு செல்ல இயலும்.

சிலர் ஆசிரியர் வேலைக்குச் செல்வர். சிலர் கள்ளக்கணக்கு எழுதும் அக்கவுண்ட்ஸ் துறையில் சேர்ந்து விடுவர். உங்கள் எதிரிகள் பம்மி, இருட்டிலிருந்து கல் எறிவர். எதிரிகளை இனங்காண இயலாமல் தவிப்பீர்கள். வழக்குகள் கிணற்றில் போட்ட கல் மாதிரி இருக்கும்.

### திருமணம்

உங்கள் பெற்றோர் சம்மதத்துடன் ஒன்று விருபந்த திருமணம் அல்லது



கலப்பு மணம் என ஒன்று நடக்கும். இப்போது தொடங்கும் வியாபாரத்தில் உங்கள் பெற்றோரே பங்குதாரர் ஆகிவிடுவர். எதிர்பாராத இடையூறு இந்த வருடம் சிம்மராசிக்கு எதிர்பார்த்த துன்பமே வரிசை கட்டி நிற்கும். சப்தம சனியும் அஷ்டம ராகுவும் உங்களை கட்டி உதைப்பார்கள். ஏதோ ராசியதிபதி உச்சமும் உடன் குரு சேர்க்கையும் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள்.

### அதிஷ்டம்

இந்த வருட அதிஷ்டம், யோகம் எல்லாம் உங்களுக்கு நீங்களே உண்டாக்கிக் கொள்ள வேண்டியது தான். உங்கள் வாரிசு கொஞ்சம் உதவுவார். உங்கள் பெற்றோரின் ஆதரவு உங்களின் யோகத்தை பெருக்கும். மற்றபடி ரொம்ப அதிஷ்டத்தை எதிர்பார்க்க வேண்டாம்.

### தொழில்

தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் உச்சம் இருப்பதோ 8 ஆம் வீட்டில். எண்ணத்தைச் சொல்ல விளக்கேற்றி வைத்து கூடையை போட்டு மூடின மாதிரி, தொழில் செழிப்பு வெளியே தெரியாது. மற்றும் உங்களால் முழுமையாக அனுபவிக்க இயலாது. சிலருக்கு தொழிலாளர்கள் ரொம்ப பிரச்சினை செய்வர்.

### லாபம்

இந்த வருடம் அபரிமிதமான லாபம் கிடைக்க வாய்ப்பிருப்பினும், அது உங்கள் கைக்கு வந்து சேராது. நீங்கள் என்ன நினைத்தாலும், அதற்கு எதிராக நடந்து தொலைக்கும்.

இந்த வருடம், சிம்ம ராசியார், தேர்தலில் பங்கு பெறுவது, நன்மை தராது. நீங்கள் நிற்கும் தொகுதியில் செலவு மட்டும் மானாவாரியாக செய்ய வேண்டியிருக்கும்.

ஆனால் வைப்புப் பணம் கூட கிடைக்காது. நோட்டாவிடம் தோற்றுப் போவீர்கள். தேர்தலில் நிற்பது எனும் ஆணியே புடுங்க வேண்டாம்.

### விரயம்

இந்த வருடம் உங்களுக்கு நிறைய செலவு ஆகும். ஆனால் முக்கால் வாசி செலவுக்கு கணக்கே எழுத முடியாது. எல்லாம் மறைமுக செலவாக இருக்கும். சரி செலவு தான் ஆகிறது. அதனால் நன்மை இருக்குமா எனில் தம்படி பிரயோசனம் இருக்காது.

பணம் செலவழிவது தான் நடக்கும். நிறைய இரகசிய பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். வெளிப்படையாக நடமாட முடியாது.

### பரிகாரம்

சனி + செவ்வாய் சேர்க்கைக்கு ஞாயிற்றுக் கிழமை பன்னீர் பூமாலை மற்றும் அகல் விளக்கில் புங்கம் எண்ணெயில் 19 மிளகை மூட்டை கட்டி சிகப்பு நிற திரி கொண்டு தீபம் ஏற்றவும்.

இந்த வருடம் உங்களுக்கு நாட்களை தள்ளுவதே பெரும் பாடாக இருக்கும்.இதில் பிறருக்கு என்ன உதவி செய்ய இயலும். வார்த்தைகளால் பிறரை நோகடிக்காதீர்கள். அதுவே பரிகாரம். சிம்ம ராசிக்கு 50% மார்க் போடலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு சிகிச்சை முகாமும் விழிப்பூட்டல் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீரிழிவுக் கழகமும் யாழ். பல்கலைக்கழக கல்லூரியும் இணைந்து நடத்தும் நீரிழிவு சிகிச்சை முகாமும் விழிப்பூட்டல் செயலமர்வும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் குருநகர், பிரதான வீதி சென் ஜேம்ஸ் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இலவச பரிசோதனைகளாக குறித்த நிகழ்வில் நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்றுநோய் தொடர்பான விழிப்பூட்டல், கண் பரிசோதனை, நீரிழிவு நோயாளர்களுக்கு நீரிழிவுக் கைநூல் மற்றும் வைத்திய ஆலோசனைகள் வழங்கப்படும். (ரி-6)


**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

ஒரு கை பாவனையில் உள்ள சகல பத்திரங்களுடன் கூடிய சபாரி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. நேரில் வரவும்.

(503)

வேளாதோப்பு, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தொ.இல: 077 549 2672


## சேவைநலன் பாராட்டு



உயர்திரு. **வேலுப்பிள்ளை அருந்தவராசன்**

B.A, சமூக சேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்.

முப்பத்துமூன்று வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் சேவையாளன் அருந்தவராசன் ஐயா! மக்கள் சேவையினை பக்குவமாய் ஆற்றி பணியில் சிறந்திட்ட தங்களின் வாழ்வும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விபரம்**

| | |
|---|---|
| 01.11.1989 - 04.01.2004 | பிரதேச செயலகம் - செட்டிகுளம் |
| 05.01.2004 - 03.01.2005 | பிரதேசசெயலகம் - கரவெட்டி |
| 05.01.2005 - 30.12.2011 | பிரதேசசெயலகம் - சண்டிலிப்பாய் |
| 02.01.2012 - 01.02.2013 | பிரதேசசெயலகம் - தெல்லிப்பழை |
| 05.02.2013 - 14.03.2021 | பிரதேச செயலகம் - சங்கானை |
| 15.03.2021 - 26.02.2023 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் |

வாழ்த்துவோர்:- வடமாகாண சமூகசேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்.

## சேவைநலன் பாராட்டு



உயர்திரு. **செல்லத்துரை ஸ்ரீநிவாசன்**

B.A(Geography), M.A (Sociolgy)
சமூக சேவை உத்தியோகத்தர் -
வவுனியா தெற்கு

இருபத்துமூன்று வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் சேவையாளன் ஸ்ரீநிவாசன் ஐயா! மக்கள் சேவையினை பக்குவமாய் ஆற்றி பணியில் சிறந்திட்ட தங்களின் வாழ்வும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விபரம்**


| | |
|---|---|
| 07.06.2000 - 01.03.2002 | பிரதேச செயலகம் - கோமரங்கடவல |
| 01.03.2002 - 03.06.2008 | பிரதேச செயலகம் - மன்னார் |
| 04.06.2008 - 31.01.2013 | பிரதேச செயலகம் - செட்டிகுளம் |
| 01.02.2013 - 14.03.2021 | மா.ச.உத்தியோகத்தர் -வவுனியா |
| 15.03.2021 - 12.02.2023 | பிரதேச செயலகம் - வவுனியா தெற்கு |

வாழ்த்துவோர்:- வடமாகாண சமூகசேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்.

## சேவைநலன் பாராட்டு

உயர்திரு. **சவரியப்பு தலிமை சந்திரபோஸ்**

B.Sc(Agri), LLB, Attorney at Law, Diploma in Conuseling
சமூக சேவை உத்தியோகத்தர் - மன்னார்



பதினான்கு வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் சேவையாளன் சந்திரபோஸ் ஐயா! மக்கள் சேவையினை பக்குவமாய் ஆற்றி பணியில் சிறந்திட்ட தங்களின் வாழ்வும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விபரம்**

| | |
|---|---|
| 25.02.2009 - 13.09.2015 | பிரதேச செயலகம் - நானாட்டான் |
| 14.09.2015 - 21.02.2023 | பிரதேச செயலகம் - மன்னார் |

வாழ்த்துவோர்:- வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்.

## சேவைநலன் பாராட்டு

திருமதி. **கவுத்திரி அனோஜன்**

B.Sc.(Special) in Health promotion
சமூக சேவை உத்தியோகத்தர் - ஒட்டுசுட்டான்



உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் சேவையாளர் கவுத்திரி அம்மணி! மக்கள் சேவையினை பக்குவமாய் ஆற்றி பணியில் சிறந்திட்ட தங்களின், செல்லும் இடமெங்கும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விபரம்**

07.06.2021 - 15.01.2024
பிரதேச செயலகம் - ஒட்டுசுட்டான்

(484)

வாழ்த்துவோர்:- வடமாகாண சமூகசேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## பாரதம்


# இந்திய மக்களவைத் தேர்தல்
# தலைவர்கள்,பிரபலங்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு


(டில்லி)

**இந்தியாவில் 18 ஆவது மக்களவைத் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப் பதிவு நேற்று ஆரம்பமானது. பொது மக்கள், முக்கியத் தலைவர்கள் மற்றும் பிரபலங்கள் என பலரும் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.**









தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை எஸ்.ஐ.டி கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடிக்கு தனது குடும்பத்தினருடன் நடந்தே சென்று வாக்கு செலுத்தினார்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஊத்துப்பட்டி வாக்கு சாவடியில் அண்ணாமலை வாக்களித்தார்.

தென் சென்னை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவான்மியூர் பாரதிதாசன் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளியில், அதே பகுதியில் வசிக்கும் நடிகர் அஜித்குமார், தனது வாக்கை பதிவு செய்தார்.

சேலம் சிலுவம்பாளையத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சிதம்பரத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் ப சிதம்பரம், சென்னை சாலி கிராமத்தில் பா.ஜ.க தென் சென்னை வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் ஆகியோர் வாக்களித்தனர்.

தருமபுரியில் பாமக வேட்பாளர் சௌம்யா அன்புமணியும், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸும் வாக்களித்தனர். (நி-6)

## இந்திய தேர்தல் வாக்குச் சாவடியில் துப்பாக்கிச்சூடு
### மணிப்பூரில் பதற்றம்



(டில்லி)

இந்தியாவின் மணிப்பூர் வாக்குச் சாவடியில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றதால், அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தேர்தலின் முதல் கட்ட வாக்குப்பதிவு நேற்று காலை முதல் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், வரிசையில் நின்ற வாக்களர்களிடையே வன்முறை ஏற்பட்டுள்ளது.

இதில் தமன்போக்பி வாக்குச்சாவடியில் அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். எனினும், இந்த துப்பாக்கிச்சூட்டில் யாருக்கும் காயமோ, உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-6)

## மாலைதீவு அதிபர் மீது ஊழல் குற்றச்சாட்டு பதவி விலக எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதியாக முகமது முய்சு உள்ளார். இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முகமது முய்சு கடந்த 2018 ஆம் ஆண்டு ஊழலில் ஈடுபட்டதாக,நிதி புலனாய்வு அமைப்பு மற்றும் மாலைதீவு பொலிஸ் தயாரித்ததாக கூறப்படும் அறிக்கை சமூக வலைத்தளங்களில் வெளியானது.

அதில் ஜனாதிபதி முய்சுவின் தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு நடந்த பணப் பரிமாற்றங்களில் முறைகேடுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவில் வருகின்ற 21 ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் ஜனாதிபதி மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி முய்சுவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்கட்சிகளான மாலைதீவு ஜனநாயக கட்சி மற்றும் மக்கள் தேசிய முன்னணி வலியுறுத்தி உள்ளன. ஆனால் தன் மீதான குற்றச்சாட்டை ஜனாதிபதி முகமது முய்சு மறுத்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## புத்தத்தின் வலியை சுட்டும் புகைப்படத்துக்கு விருது



(நெதர்லாந்து)
2024 ஆம் ஆண்டுக்கான வர்ல்ட் பிரஸ் போட்டோ விருதை வன்றுள்ளார். ரொய்ட்டர்ஸ் சய்தி நிறுவனத்துக்காக பணி ாற்றி வரும் முகமது சலேம் ன்ற பத்திரிகையாளர்.

இஸ்ரேல் - ஹமாஸ் அமை ிற்கு இடையிலான மோதலில் யிரிழந்த 5 வயது குழந்தை ன் உடலை கையில் ஏந்தியபடி ருந்தும் பெண்ணின் புகைப்பட துக்கு விருது கிடைத்துள்ளது.

இந்தப் புகைப்படம் கடந்த ண்டு ஒக்டோபர் மாதம் தெற்கு சாவின் கான்யூனிஸ் என்ற ததியில் அமைந்துள்ள நாசர் ருத்துவமனையில் எடுக்கப்ப து.

மருத்துவமனையின் சவக்கிட கில் துணியால் சுற்றப்பட்ட யிரிழந்த தனது 5 வயது மருமகளின் உடலைப் பார்த்து பெண் ஒருவர் அழுவதை தனது கமரா கண்களின் வழியே படம் பிடித்திருந்தார் முகமது சலேம்.

ஆம்ஸ்டர்டாமை தலைமை யிடமாகக் கொண்ட வேர்ல்ட் பிரஸ் போட்டோ ஃபவுண்டேஷன் அமைப்பு ஆண்டுதோறும் சிறந்த படத்துக்கான விருதை வழங்கி வருகிறது.

அந்த வகையில் யுத்தம், மோதல் போன்ற பகுதிகளில் பணியாற்றும் பத்திரிகையா ளர்கள் எதிர்கொள்ளும் அச் சுறுத்தலை அங்கீகரிப்பது அவ சியம் என அந்த அமைப்பு தெரி வித்துள்ளது.

கடந்த ஒக்டோபரில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோத லில் சுமார் 99 பத்திரிகையா ளர்கள் மற்றும் ஊடக பணியா ளர்கள் தமது இன்னுயிரை இழந்துள்ளதாகவும் தெரிவித் துள்ளது.

முகமது சலேம், 39 வயதான பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்தவர். புகைப்பட பத்திரிகையாளர். 2003 முதல் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தில் பணியாற்றி வரு கிறார். இதற்கு முன்பு கடந்த 2010இல் வேர்ல்ட் பிரஸ் போட்டோ விருதை வென்று ள்ளார். (நி-6)

## ரஷ்யாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது
### சர்வதேச நாணய நிதியம்

(வோஷிங்டன்)
உலகின் அனைத்து முன்னேறிய பொருளாதார ங்களையும் விட இந்த ஆண்டு ர்ஷ்யாவின் பொரு ளாதாரம் வேகமாக வளரும் என சர்வதேச நாணய நிதி யம் கணித்துள்ளது.

சர்வதேச நாணய நிதி யம் இந்த ஆண்டு ரஷ்ய பொருளாதாரம் 3.2% வள ர்ச்சியடையும் என்று எதிர் பார்க்கிறது என்றும் இது பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியை விட கணிசமாக வேகமாக இருக் கும் என தெரிவிக்கப்பட்டு ள்ளது .

இதேவேளை சர்வதேச நாணய நிதியம், எண் ணெய் ஏற்றுமதி "நிலை யாக" இருப்பதாலும், உய ர்வாக் இருப்பதாலும், அர சாங்க செலவீனங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கி றது.

மொத்தத்தில், ரஷ்யப் பொருளாதாரம் உலகப் பொரு ளாதாரத்தை எதிர்கொள் வதற்கான சிறந்த நிலை ப்பாட்டில் இருப்பதாக சர்வ தேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்யா வங்கி அமைப்பை பெருமளவில் மீள்தன்மையுடன் வைத் திருக்க முடிந்ததுடன் உலக ளாவிய மந்தநிலையைத் தவிர்க்க முடிந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)


## வெப்பமான காலநிலையால் 102 பேர் இதுவரை உயிரிழப்பு

(ஆபிரிக்கா)
பல நாடுகளில் நிலவும் வப்பமான காலநிலை கார ணமாக 102 பேர் உயிரிழ துள்ளதாக தெரிவிக்கப்படு ன்றது.

மேற்கு ஆபிரிக்காவில் யிரிழந்தவர்களில் பரும்பாலானோர் 60 யதுக்கும் மேற்பட்டவர்கள் ன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் வெப்ப நிலை 48 பாகை செல்சி யஸைத் தாண்டியுள்ளதாக வும், அதிக வெப்பத்தினால் வைத்தியசாலைகளில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கி ன்றன. (நி-6)

## ஈரானின் அணு உலைகளிற்கு பாதிப்பில்லை
### ஐ.நா அமைப்பு தெரிவிப்பு



(ஜெனீவா)
இஸ்ரேலின் தாக்குதல் காரண மாக ஈரானின் அணு நிலையங்கள் எவற்றிற்கும் பாதிப்பு ஏற்படவில்லை என சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

நிலைமையை உன்னி ப்பாக அவதானித்து வரு வதாக தெரிவித்துள்ள அந்த அமைப்பு அனைத்து தரப்பி னரும் கடும் நிதானத் தையும் பொறுமையையும் கடைப்பிடிக்கவேண்டும் என வும் வேண்டுகோள் விடுத்து ள்ளது.இராணுவமோதல்க ளின் போது அணுசக்தி நிலையங்கள் ஒருபோதும் இலக்காக கருதப்படக்கூடாது என ஐ.நா அமைப்பு தெரி வித்துள்ளது. (நி-6)

## ஈரான் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்!
### பல விமான சேவைகள் ரத்து



(டெஹ்ரான்)
ஈரானின் குறிப்பிட்ட லக்குகள் மீது இஸ்ரேல் நற்று தாக்குதல் நடத் யுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ளது.

இதனால் ஈரான் வான் ரப்பை தவிர்க்க சில விமான றுவனங்கள் தீர்மானித் ள்ளன என்றும் வெளி ாட்டு செய்திகள் தெரி வித்துள்ளன.

இதேவேளை இஸ்ரேல் தாக்குதலை நடத்தினால் மோசமான எதிர்வினை உடனடியாக ஆற்றப்படுமென ஈரான் வெளிவிவகார அமைச்சர் எச்சரித்துள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் இஸ்ரேல் ஈரான் நிலைகள் மீது வான் தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்காவும் உறுதி செய் துள்ளமையும் குறிப்பிடத்த க்கது. (நி-6)

## ஐ.நா சபையில் பாலஸ்தீனத்தை உறுப்பினராக்கும் தீர்மானத்தை அமெரிக்கா தடுத்தது

(ஜெனீவா)
இஸ்ரேல்- பாலஸ்தீனத்தின் காசாமுனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் இடையே போர் நடந்து வரு கிறது.

இதில் காசாவில் 33 ஆயி ரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். இப்போ ரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவாக உள்ளது.

இந்த நிலையில் 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா பொதுச்சபையில் பாலஸ்தீனத்தை முழு உறு ப்பினராக அனுமதிக்க வேண்டும் என்ற முயற்சியை பாலஸ்தீனம் மேற்கொண்டது.

இதை பரிந்துரைக்கும் வரைவு தீர்மானத்தின் மீது 15 உறுப்பினர்களை கொண்ட ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் வாக்கெடுப்பு நடந்தது.




தீர்மானத்திற்கு ஆதரவாக 12 வாக்குகள் பதிவானது, சுவி ட்சர்லாந்து, இங்கிலாந்து வாக்களிக்கவில்லை . இந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி முறியடித்தது.

தற்போது பாலஸ்தீனம் ஐ.நா வில் உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடாக உள் ளது. ஐ.நா வின் நடவடிக்கை களில் பாலஸ்தீனம் பங்கேற்க முடியும் ஆனால் தீர்மானங் களில் வாக்களிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி அறக்கட்டளை,
யாழ்.போதனா வைத்தியசாலை,
மருத்துவ பீடம் இணைந்து
உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலையம்

## திறப்பு விழா



**இல்லம் அன்பளிப்பு**

வைத்தியநிபுணர்.அ.பாலசுப்ரமணியம்
சாவித்திரிதேவி தம்பதிகள். (அவுஸ்திரேலியா)

**காலம்: 21.04.2024**
**(நாளை ஞாயிற்றுக்கிழமை)**
**காலை 9.30 மணிக்கு**



**இடம்: சிவபூமி இல்லம் (இல 61,முதலாம் குறுக்குத்தெரு.யாழ்ப்பாணம்)**

அன்புடையீர், வணக்கம்.

சமூகத்தின் நலன்கருதி நாம் இணைந்து நடாத்த இருக்கும் வைத்திய நிலையத் திறப்புவிழாவிற்கு தாங்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்
**கலாநிதி.ஆறு.திருமுருகன்** (தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)

**சுகநல நிலையத்தை திறந்து வைப்பவர்**
பிரதம விருந்தினர்
**திரு.S.R.K.கனக் ஈஸ்வரன் அவர்கள்** (ஜனாதிபதி சட்டத்தரணி)

வரவேற்புரை
**வைத்திய நிபுணர். ந. சரவணபவா அவர்கள் (யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)**

ஆசியுரை
**ஆன்மீக சுடர், ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள் (முதல்வர்-சுப்ரமுனிய கோட்டம்)**

தொடக்கவுரை
**வைத்தியகலாநிதி. த.சத்தியமூர்த்தி அவர்கள் (பணிப்பாளர்-யாழ். போதனா வைத்தியசாலை)**

வாழ்த்துரை
**பேராசிரியர். சி.ஶ்ரீசற்குணராசா அவர்கள் (துணைவேந்தர்-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)**
**பேராசிரியர். இ. சுரேந்திரகுமார் அவர்கள் (பீடாதிபதி-யாழ். மருத்துவ பீடம்)**

அறிமுகவுரை
**வைத்தியநிபுணர்.பா.பாலகோபி அவர்கள் (விரிவுரையாளர்-யாழ்.மருத்துவபீடம்)**

நன்றியுரை
**வைத்தியநிபுணர்.சி.ரகுராமன் அவர்கள் (விரிவுரையாளர்-யாழ். மருத்துவபீடம்)**

(C-0171) அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.**

**சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.**


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 130 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 130 | 100-120 | 160 |
| தக்காளி | 100 | 80 | 80 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 80-120 | 150 |
| கோவா | 180 | 200 | 150 | 250 | 280 |
| கரட் | 300 | 400 | 400 | 300 | 400 |
| பூசணி | 160 | 130 | 80 | 80-100 | 140 |
| புடோல் | 120 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 250 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 380 | 400 | 270 | 350 |
| பாகற்காய் | 250 | 250 | 250 | 300 | 300 |
| வெண்டக்காய் | 150 | 150 | 130 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 200-280 | 150 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 200 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 250 | 350 |
| கறிமிளகாய் | 300 | 300 | 500 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 350 | 400-1000 | 800 |
| போஞ்சி | 200 | 250 | 300 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 60 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 50 | 50-100 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 500-700 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 60-130 | 120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | -- | 350 |
| வெங்காயப்பூ | -- | 200 | 150 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 100 | -- |

# இன்று ஒரு தகவல் 100



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பிறவி ஞாபகம்

ஒரு குடும்பத் தலைவர் தன் மனைவிக்கு ஐஸ் வைக்க வேண்டும் என்று நினைத்தார். இதோ பார் டார்லிங்! என்னோட 49 பிறவியிலேயும் உன் கூடவே குடும்பம் நடத்தணும் என்று ஆசைப்படுகிறேன் என்றார்.

அது என்ன கணக்கு? 49 என்று கரெக்டா சொல்றீங்க என்றார் அந்த அம்மா. ஏழேழு ஜென்மம் என்று சொல்றாங்களே அது தான் ஏழை ஏழாலே பெருக்கி 49 என்று சொன்னேன் என்றார் அவர்.

அவர் போட்ட பெருக்கல் சரி.7x7=49 ஆனால் இந்த பிறவிகளிலே உங்களுக்கு நம்பிக்கை இருக்கா? சிலபேர் மறுபிறவி உண்டு என்கிறார்கள். சிலபேர் இல்லை என்கிறார்கள் எதை நம்புவது?

எதையும் நாம் கண்ணாலே பார்த்தால் தான் நம்பலாம். இருந்தாலும் சிலபேருக்கு அவங்களோட முந்தின பிறவிகள் ஞாபகம் வந்துவிடுவதாக பத்திரிகைகளில் அப்பப்போ செய்திகள் வருகிறது. சிலவேளை ரொம்ப சுவாரஷ்யமா கூட இருக்கு. நமக்கெல்லாம் முதல்நாள் நடந்தது கூட ஞாபகம் வரமாட்டுது. இங்கிலாந்திலே ஜோன் கிராங் என்று ஒரு அம்மா. 1907 ஏப்ரல் 12 ஆம் திகதி பிறந்தவர். அவருக்கு சின்ன வயதிலேயே முந்தின பிறவிகள் ஞாபகம் வந்து விட்டதாம். ஒன்று, இரண்டு இல்லை. 40 பிறவி வரைக்கும் ஞாபகப்படுத்தி சொல்றாங்க.

ஒவ்வொரு பிறவியிலேயும் வாழ்ந்தது எப்படி? செத்தது எப்படி என்று எல்லாம் ஞாபகம் இருக்காம். சில பிறவியிலேயே ஆணாக இருந்திருக்கிறார். சில பிறவியிலே பெண்ணாக இருந்திருக்கிறார். இத்தாலியிலே ஒரு பிறவி. பிரான்ஸிலே ஒரு பிறவி. சூனியக்காரியாக ஒரு பிறவி. சிவப்பிராந்தியராக ஒரு பிறவி. எகிப்திலே ஒரு பிறவி... இப்படி நிறைய.

இந்த அம்மா பிறந்தது ஒரு வசதியான குடும்பம். அவர்கள் அப்பா எப்படி என்றால். கடவுள் நம்பிக்கையெல்லாம் இல்லாதவர். ஜாக் மர்சால் என்று பெயர். ஸ்கோலர் எச்.ஜி வீல்ஸ் என்ற புகழ் பெற்ற நாவலாசிரியர் ஒருதர் இருந்தார் அல்லவா. அவர் இவருடைய நண்பர்.

சின்ன வயதிலே அந்த பெண் நான் போன ஜென்மத்திலே அப்படி இருந்தேன் இப்படி இருந்தேன் என்று சின்னப்பிள்ளை! குழந்தைத்தனமாக உளறுது என்று நினைத்து அதை அலட்சியப்படுத்திவிட்டார். ஒரு சமயம் ஸ்கோலர் எச்.ஜி வீல்ஸ் இவருடைய வீட்டிலே வந்து தங்கி இருந்தபோது அவரிடம் இந்தப் பெண் போன ஜென்ம ஞாபகத்தையெல்லாம் சொல்லிச்சாம்.

அவர் இதை நம்பினார். ஆரம்பத்தில் மற்றவர்கள் சிரிப்பார்கள். அதை தாங்கிக்கொள்கிற மனப்பக்குவம் உனக்கு வரும் வரைக்கும் இதையெல்லாம் மனசுக்குள்ளே வைத்துக்கொள். ஆனால் அவ்வளவையும் பின்னால் புத்தகமாக எழுது என்று அவர் அட்வைஸ் பண்ணியிருக்கிறார்.

அதே மாதிரி பின்னர் புத்தகமாக எழுதினார்.12 புத்தகத்துக்கு மேலே எழுதியிருக்கிறார்... அது 14 மொழிகளிலே வந்திருக்கு.

இந்தப் பெண் விடுமுறைக்காக ஒரு தரம் சுவிட்சர்லாந்துக்குப் போயிருந்தார். ஒரு ஹோட்டலிலே ஒருவரைப் பார்த்ததும் இவருக்கு ஆச்சரியமாய் போயிற்று. ஏற்கனவே கனவிலே சுற்றிச் சுற்றி வந்த அதே ஆள் இப்ப நிஜமாகவே கண் முன்னாலே நிற்கிறார். அவர் பெயர் எஸ்மோன்ட். அடுத்த 24 மணி நேரத்துக்குள்ள ஜோனும் எஸ்மோனும் திருமணம் செய்வது என்று முடிவுக்கு வந்துவிட்டார்கள். இருந்தாலும் ஆறுமாதம் காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை. ஏன் என்றால் எஸ்மோன்ட் பாரிஸிலே ஆறுமாதம் இருக்க வேண்டிய நிலமை.

அவர் பாரிஸ் போவதற்கு முன்னர் இவங்க அப்பா வீட்டில் கொஞ்ச நாள் இருந்தார்கள். அவர் புறப்பட நேரம் நெருங்க, நெருங்க இந்த பெண்ணுக்கு ஒரு வினோதமான உள்ளுணர்வு வந்தது.

அதாவது இனிமேல் இவரைச் சந்திக்கப் போறதில்லை என்று. ஆறு மாதம் கழித்து அவர் பாரிஸிலேயிருந்து திரும்பி வர வேண்டிய நாளுக்கு முதல் நாள் இரவு பாரிஸிலே ஒரு விபத்தில் அவர் இறந்து போனார்.

இப்படி அந்தப் பெண் வாழ்க்கையில் ஏகப்பட்ட வினோதங்கள்.

B.B.C தொலைக்காட்சியிலே அந்தப் பெண்ணை பேட்டி கூட கண்டாங்களாம். உங்கள் பழைய பிறவிகளிலே உங்களுக்கு ரொம்பவும் பிடித்த பிறவி எது என்று கேள்வி கேட்டார்களாம். 3000 வருடத்திற்கு முன்னர் எகிப்திலே ராஜவம்சத்திலே பிறந்திருந்தேன். அதுதான் எனக்குப் பிடித்த பிறவி. ஏன் என்றால் அப்பொழுது ஒவ்வொருத் தரும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு நல்ல வாய்ப்புகள் இருந்தது என்றார் அந்தப் பெண்.

இந்தத் தகவலைக் கேட்டதுக்கு அப்புறம் உங்களிலே யாருக்காவது பழைய ஜென்மம் ஞாபகத்துக்கு வந்தால் ஒரு வார்த்தை எழதிப்போடுங்கள். இல்லை என்றால் விட்டுவிடுங்கள். அதுக்காக சிரமப்பட்டுக்கொண்டு இருக்க வேண்டாம். போன ஜென்மம் ஞாபகம் வருவதில் ஒரு சங்கடமும் இருக்கு. ஒருத்தர் ஒரு கழுதையைப் பிடித்து அது வாலில் ஒரு தகர ரின்னைக் கட்டிக் கொண்டு இருந்தார். அதை ஓட விட்டு வேடிக்கை பார்ப்பதற்காக! அந்த வழியாக வந்த பெரியவர் ஒருவர் இதை பார்த்து விட்டு அவருக்கு புத்தி சொன்னார்.

இது மாதிரி இப்ப நீ செய்தால் அடுத்த ஜென்மத்திலே நீ கழுதையாகப் பிறந்து உன் வாலில் இதே மாதிரி தகர ரின்னைக் கட்டும் என்றார். அதுக்கு அவர் அப்படி இல்லை பெரியவரே. எனக்கு போன ஜென் ஞாபகம் வந்து விட்டது. அப்போ நான் கழுதையாக இருந்தேன். இந்த கழுதை மனுசனாக இருந்து என் வாலிலே தகர ரின்னை கட்டியது இப்ப பழிக்குப் பழி வாங்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ஆலய வருடாந்த மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# சித்திரா பூரணை விரதம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டப் பூசையும் இடம்பெற்று காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (நி-6)

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சித்திராப் பூரணை விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு மூலமூர்த்திக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)

# விருது வழங்கலும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடத்தும் தமிழ் இலக்கியப் பெருவிழாவில் இரா.உதயணன் இலக்கிய விருது - 2023 வழங்கலும் பேராசிரியர் சபா.ஜெயராசாவின் "வளர்தமிழ் கலைச் சொற்கள்" எனும் நூலின் அறிமுகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)



நானாட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் "நிலைபேறான வீட்டுத்தோட்டம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நானாட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (படம் : ஜோசப்நயன்)

# தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வீணாக்கடவை காசிவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் அரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழவும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# கோம்பயன் இந்து மயான பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்க முன்றலில் நடைபெறவுள்ளது.

சகல ஆயுட்கால உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3094

### மதனிகா


அத்தியாவசியத்திற்கு செலவு செய்யும் நாங்களே இவ்வளவு கடன்காரனா இருக்கோமே....



ஆடம்பர செலவு செய்றவங்கள் எல்லாம் எப்படியோ...


### செரோன்

பரீட்சை பேப்பரில குட் வாங்கினவங்களை விட




வாத்தியாரிட்ட யார் கொட்டு வாங்கினாங்களோ அவங்கள் தான் இப்ப நல்லா இருக்கிறாங்கள்

### நிலுக்ஷி




### ரிதனன்

வண்டியில் ஏறி படுத்து தூங்கினாலும்



தோட்டத்திலிருந்து வீட்டுக்கு சரியாக கொண்டு வந்து விடும் சம்பளம் வாங்காத டிரைவர்கள் இந்த காளைகள்

### மதுமிகா

ஒன்னுமே புரியாத பாட்டெல்லாம் ஹிட் ஆகும் போது...



ஒன்னுமே புரியாத நம்ம வாழ்க்கையும் ஒரு நாள் ஹிட் ஆகமலா போய்விடும்...

### அனோஷ்

மனைவியோட சின்ன வயது ஸ்கூல் ரிப்போர்ட் கார்டை பார்த்து கணவன் அப்படியே ஷாக் ஆனான் அதில் எழுதி இருந்த கமென்ட்



மிகவும் கீழ்ப்படிதலுள்ள அமைதியான மாணவி என எழுதப்பட்டிருந்தது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 460



பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் படகு வலிக்கும் சத்தம் கேட்டு ஆழ்வார்க்கடியான் முதலில் விழித்துக் கொண்டான். இவன் எதிரில் தோன்றிய காட்சி அவனை திடுக்கிட செய்தது. கடலில் கொஞ்ச தூரத்திற்கு அப்பால் பாய் மரம் விரித்த மரக்கலம் ஒன்று நின்று கொண்டு இருந்தது. அது பயணப்படுவதற்கு ஆயத்தமாக நின்றதாக நன்கு தெரிந்தது. அந்த மரக்கலத்தை நோக்கி கரையில் இருந்து ஒரு படகு போய் கொண்டு இருந்தது. அதில் படகுக்காரனை தவிர 3 பேர் இருந்தார்கள். அந்த படகு முதல் நாள் மாலை தங்களை ஏற்றி வந்த படகுதான் என்று தெரிந்து கொள்ள ஆழ்வார்க்கடியானுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

அந்த மரக்கலம் எங்கிருந்து திடீரென்று கிளம்பிற்று என்பதையும் அவன் விரைவிலே ஊகித்துக் கொண்டான். அவர்கள் படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் கடல் பூமிக்குள் குடைந்து சென்றிருந்தது. மரங்கள் அந்த இடத்தை ஒரளவு மறைந்திருந்தன. அந்தக் குடாவிலேதான் அம்மரக்கலம் நின்றிருக்க வேண்டும் பொழுது விடிந்ததும் புறப்பட்டிருக்க வேண்டும்.

அந்த மரக்கலம் யாருடையது? எங்கிருந்து வந்தது? எங்கே போவது? படகு எதற்காகக் கப்பலை நோக்கிப் போகிறது? அதில் இருப்பவர்கள் யார்? இவ்வளவு கேள்விகளும் ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் மின்னலைப் போல் தோன்றி மறைந்தன.

"சேனாதிபதி! சேனாதிபதி! எழுந்திருங்கள்!" என்று கூவினான்.

சேனாதிபதியும், வந்தியத்தேவனும், மற்ற இரு வீரர்களும் திடுக்கிட்டு விழித்தெழுந்தார்கள்.

முதலில் கடலில் நின்ற பாய்மரக் கப்பல் அவர்கள் கண்ணில் தென்பட்டது. சேனாதிபதி, "ஓ! அது சோழ நாட்டுக் கப்பல்தான். பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலாகவே இருக்கலாம்! இளவரசர் ஒருவேளை அதில் போகிறாரோ, என்னமோ? ஐயோ! தூங்கிப் போய் விட்டோமே! என்ன பிசகு செய்தோம்!" என்றார்.

பிறகு, "படகு எங்கே? போய்க்கப்பலைப் பிடிக்கமுடியுமா என்று பார்க்கலாம்!" என்றார்.

அதற்குள் படகு சென்று கொண்டிருப்பதும் அவர் கண்ணில் படவே, "அடடே! அதோ போகிறது நாம் வந்த படகல்லவா? அதில் ஏறிப் போகிறவர்கள் யார்? அடே படகுக்காரா! நில் நில்!" என்று இரைந்தார்.

படகுக்காரனின் காதில் விழுந்ததோ என்னமோ தெரியாது. அவன் படகை நிறுத்தவில்லை. மேலே செலுத்திக் கொண்டு போனான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தான் வந்தியத்தேவன். "அந்தக் கப்பலில் இளவரசர் போகிறார்!" என்று சேனாதிபதி கூறியது அவன் செவி வழியாக புகுந்து மனத்தில் பதிந்தது. அதற்குப் பிறகு வேறு எந்த நினைவிற்கும் அவன் மனத்தில் இடமிருக்கவில்லை. அவன் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பற்றித்தான் ஏதேனும் சந்தேகமுண்டா? அவன் கால்களுக்குக் கட்டளையிட வேண்டிய அவசியந்தான் உண்டா? இல்லவே இல்லை! அடுத்த நிமிடத்தில் அவன் கடலில் பாய்ந்து இறங்கினான். அலைகளைத் தள்ளிக் கொண்டு அதிவேகமாகச் சென்றான். நல்ல வேளையாகக் கடலோரத்தில் அங்கே தண்ணீர் அதிகம் இல்லை. ஆகையால் அதிசீக்கிரத்தில் வெகுதூரம் போய் விட்டான். படகின் அருகிலும் சென்று விட்டான். தண்ணீரின் ஆழம் திடீரென்று அதிகமாகி விட்டது. தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டது. "ஐயோ! நான் முழுகிச் சாகப்போகிறேன்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கத்தினான். படகில் யாரோ சிரிக்கும் சத்தம் கேட்டது. பிறகு சிலர் பேசும் குரல்கள் கேட்டன. படகு நின்றது.


(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எழுதத்தெரிந்த புலி

காட்டிலிருந்து பிடிபட்டு கொண்டுவரப்பட்ட புலி ஒன்று சர்க்கஸ் கூண்டிற்குள் அடைக்கப்பட்டிருந்தது. கூண்டில் அடைக்கப்பட்ட மற்ற மிருகங்களைப் போல இல்லாமல் பகலும் இரவும் அந்தப் புலி நடந்து கொண்டேயிருந்தது. ஏன் அப்படி கூண்டிற்குள் அலைகிறது என்று எவருக்கும் தெரியவில்லை.



ஒரு நாள் எங்கிருந்தோ ஊர்ந்து வந்த நத்தையொன்று புலிக் கூண்டின் மீது உட்கார்ந்தபடியே அதை பார்த்துக் கொண்டிருந்தது. புலி ஒய்வில்லாமல் வட்டமாக சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு எதற்காக இப்படி சுற்றிக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டது. அதற்கு புலி பதில் சொல்லவில்லை.

உடனே நத்தை 'கூண்டிற்குள் அடைபட்டுக் கிடக்க பயமாக இருக்கிறதா என்று கேட்டது. அதற்கு புலி நான் சுற்றிக் கொண்டிருக்கவில்லை. எழுதிக் கொண்டிருக்கிறேன் என்றது. நத்தைக்கு அது புரியவில்லை.

எப்படி என்று கேட்டது. கூண்டிற்குள் அடைபட்ட பிறகு வாழ்க்கையில் எதுவும் மிச்சமிருப்பதில்லை. பூஜ்யமாகி விடுகிறோம். இப்போது நான் மாட்டிக் கொண்டிருக்கிறேன், அதனால் என் வாழ்க்கை வெறும் பூஜ்யம் அதை நான் மறந்துவிடாமல் இருக்கவே சுற்றி சுற்றி நடந்து கொண்டேயிருக்கிறேன், எனது நடை பூஜ்யத்தை எழுதுவது தான்.

இப்படி நினைவு கொள்ளாவிட்டால் இந்தக் கூண்டு வாழ்க்கை பழகிப்போகும். அவர்கள் போடும் உணவு பழகிப் போகும், என்னை வேடிக்கை பார்ப்பவர்கள் முகம் பழகிப்போகும். பிறகு நான் கூண்டுப்புலியாக சுகமாக வாழப் பழகிவிடுவேன். அது அவமானம். அப்படி வாழக் கூடாது. அது ஒரு இழிவு. ஆகவே நினைவில் உள்ள காட்டை ஒருபோதும் நான் மறக்க கூடாது.

இப்போது முடக்கப்பட்டு நான் அடையாள மற்றுப் போயிருக்கிறேன் என்ற உண்மை மனதில் இருந்து கொண்டேயிருந்தால் மட்டுமே விடுதலையைப் பற்றிய நினைவு வளர்ந்து கொண்டேயிருக்கும்.

அதற்காகவே பகலும் இரவும் வட்டமாகச் சுற்றி வந்தபடியே எழுதிக் கொண்டிருக்கிறேன் என்றபடி புலி நடக்கத்துவங்கியது.

அதைக்கேட்ட நத்தை சிரித்தபடியே சொன்னது. நல்லவேளை நத்தைகளை எவரும் பிடித்துக் கூண்டில் அடைப்பதில்லை. உடனே ஆத்திரமான புலி சொன்னது. நானாவது பிடிபட்டு ஒடுங்கிக்கிடக்கிறேன். நீ பிறப்பிலிருந்தே வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கிறாய். கூண்டில் அடைக்கப்படுவது தற்காலிகம்.

முதுகிலே வீட்டைத் தூக்கி கொண்டு அலைவது அற்பமானது. உன்னைப் போன்ற நத்தைகள் வெறும் கோழைகள். நான் அடைபட்டுக் கிடந்த போதும் என் குரல் அடைக்கப்படவில்லை. கேள் என் ரௌத்திரத்தை என்றபடியே புலி உறுமியது.

அந்த குரலின் ஆழத்தில் புலியின் மனதில் இருந்த காடும் அதன் நினைவுகளும் எழுந்து அடங்கியது..

இந்தப் புலியை போன்றே நாமும் நம்முடைய வாழ்க்கை இலட்சியத்தை தினம் தினம் நம் மனதில் நினைத்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாக ஒரு நாள் நம்மால் வெற்றி பெற முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலைக்கழக கல்வி மாநாடு காத்திரமான பங்கை ஆற்ற வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்றும் (20) நாளையும் (21) கல்வி மாநாடு இடம்பெறவுள்ளது.

மாநாடு சிறப்பாக அமைய வேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன் குறித்த கல்வி மாநாடு தமிழ் மக்களின் கல்வியை உயர்த்துவதற்கு ஆதாரமாக அமைய வேண்டும் எனவும் மன்றாடுகின்றோம்.

எம்மைப்பொறுத்தவரை ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கின்ற, மானிய காலத்து நடைமுறைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதாகும்.

மாநாடுகளைக் கூட்டி அங்கு ஆய்வுக்கட்டுரைகளை வாசிப்பதென்பது ஆட்கள் இல்லாத ஊரில் 108 அடியில் இராஜகோபுரம் அமைத்து நவகுண்டம் வைத்து மகாகும்பாபிஷேகம் செய்வது போன்றது.

அதாவது கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெறும். யானை, குதிரைகள் வலம் வரும். உலங்கு வானூர்தி பூமாரி சொரியும்.

ஆனால் கும்பாபிஷேகம் முடிவுற்ற அடுத்த நாள், அந்த ஆலயத்தில் அர்ச்சகரைத் தவிர வேறு எவரும் இல்லை எனும்போது அந்தக் கும்பாபிஷேகத்தால் ஏதேனும் பலன் இருக்குமென யாரேனும் கருதினால், அதைவிட்ட அறியாமை வேறு எதுவுமாக இருக்க முடியாது.

அதுபோன்றுதான், ஏகப்பட்ட செலவில் மாநாடு கூட்டி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு; அந்த ஆய்வுக்கட்டுரைகள் கண்ணாடி அலுமாரிக்குள் அடுக்கப்படுமாயின், அதனால் ஆவது எதுவுமில்லை.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற கல்வி மாநாடு எமது தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளை ஆராய்வதாக இருக்க வேண்டும்.

ஆம், க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளைக் கற்கின்ற எம் மாணவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அவர்களால் உயர்ந்த பெறுபேறுகளைப் பெறமுடியவில்லை.

இதற்குக் காரணம் தென்பகுதியில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குறித்த உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்குகளையும் மாதிரி வினாத்தாள்களையும் வழங்கி அவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துகின்றனர்.

ஆனால், இங்கு எங்கள் மாணவர்கள் பாடத்திட்டத்தை அப்படியே உள்வாங்கிக் கொண்டாலும் மாற்றங்கள், மாதிரி அமைப்புகள், புதிய சேர்ப்பனவுகள் பற்றிய அறிவூட்டல் இன்மையால் அவர்களின் முயற்சி வீணாகிப் போகிறது.

அதேநேரம் எங்கள் மாணவர்களை ஓரளவுக்கேனும் தயார்படுத்திய தொண்டைமானாறு வெளிக்கள நிலையப் பரீட்சை வினாத்தாளை எமது மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கும் அந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

என்ன செய்வது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி மாநாடு நடக்கிறது.

ஆனால் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்துகின்ற பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இங்குதான் கல்வி மாநாடு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என மன்றாடுகின்றோம்.

## கச்சதீவு விவகாரம்

# இந்தியா சர்வதேச நீதிமன்றை நாடினால் முகம் கொடுக்க நாங்களும் தயார்

## பேராசிரியர் சந்திமா விஜேகுணவர்த்தன

(கொழும்பு)

இலங்கைக்கு சொந்தமான கச்சதீவை பெற்றுக்கொள்ள இந்தியா சர்வதேச நீதிமன்றத்தை நாடினால் அதற்கு முகம் கொடுப்பதற்கு நாங்களும் தயார். என இலங்கை மனிதநேய கட்சியின் தலைவியும் பேராசிரியருமான சந்திமா விஜேகுணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை மனிதநேய கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில், தமிழ் நாட்டு மீனவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அங்குள்ள அரசியல்வாதிகள் கச்சதீவு விவகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். தேர்தல் காலம் வரும்போது இந்தியாவை பொறுத்தவரை இது வழமையான விடயமாகும். இந்திய பிரதமரும் கச்சதீவு விடயமாக மிகவும் தீவிரமாக தேர்தல் மேடையில் உரையாற்றி இருக்கிறார்.

குறிப்பாக கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானது. அதனை இலங்கைக்கு வழங்கியது வரலாற்று தவறு. அதனால் கச்சதீவை இந்தியாவுக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம். முடியாவிட்டால் நெதர்லாந்தில் இருக்கும் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம் எனவும் இந்திய பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

கச்சதீவை பெற்றுக்கொள்ள இந்தியா சர்வதேச நீதிமன்றத்தை நாடுமாக இருந்தால், அதற்கு முகம்கொடுக்க நாங்களும் தயாராக வேண்டும். கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதற்கான ஆதாரங்களை சர்வதேச நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கைளெடுப்போம்.

கச்சதீவு விவகாரத்தால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இருந்துவரும் உறவில் பாதிப்பு ஏற்படக்கூடாது. இந்த விடயத்தில் இந்தியாவுடன் முரண்பட்டுக்கொள்ள நாங்கள் தயார் இல்லை.

இருந்தாலும் கச்சதீவு விவகாரம் என்பது எமது உரிமை சார்ந்த விடயம். அதனை எங்களால் விட்டுக்கொடுக்க முடியாது. இந்திய அரசியல்வாதிகள் தங்களின் தேர்தல் பிரசாரத்திற்கே இந்த விடயத்தை கையில் எடுத்துக் கொள்கின்றனர். தேர்தல் முடிவடைந்த பின்னர் அந்த விடயத்தை மறந்துவிடுவார்கள் என அவர் தெரிவித்தார். (நி-6)

## கிளி. மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நகர அபிவிருத்தி, மணல் அகழ்வு உப உணவுப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளின் ஊடாக மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டி அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் கரைச்சி கண்டாவளை பிரதேச செயலாளர்கள், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாய திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(நி-6-100-315-316)

## போதைப் பொருட்களுடன் 726 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப் பின்போது நச்சுத் தன்மை மிக்க போதைப் பொருட்களும் 10 பெண்கள் உட்பட 726 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 25 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையாகவுள்ள 6 சந்தேக நபர்களைபுனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப் பின் போது 176 கிராம் ஹெரோயின், 83 கிராம் ஐஸ், 201 கிராம் கஞ்சா, 10 கிராம் ஹெரோயின் மற்றும் 74 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-6)

## ஜே.வி.பி-பேராயர் சந்திப்பு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

### பாலித்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் மக்கள் விடுதலை முன்னனியினர், மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாலித்த ரங்கே பண்டார மேலும் தெரிவித்துள்ளதாவது "நாட்டிலுள்ள மதத் தலைவர்கள் மீது மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்த நம்பிக்கையின் வெளிப்பாடே, மக்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்துகின்றனர். எனவே மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக மதத்தலைவர்கள் செயற்படவேண்டும்.

மத்தலைவர்கள் சரியாக செயற்படுவீர்களாக இருந்தால் நாடு சிறப் பாக இருக்கும். கடந்த 2019 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட முடிவு நாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 2024 ஆம்ஆண்டு ஒரு முடிவை எடுக்க வேண்டிய தேவையொன்று உள்ளது.

அந்த முடிவை எடுக்க வேண்டிய நேரம் வரும் பொழுது அநாவசியமான பிரச்சினைகளை தவிர்த்து மக்களுக்கு மீண்டும் ஒரு பிரச்சினையை உருவாக்காமல், சரியான ஒரு முடிவை எடுக்க மதத் தலைவர்களான நீங்கள் இடம்கொடுக்க வேண்டும்.

அதேபோன்று இவ்வளவு காலமும் அமைதியாக இருந்த ஜே.விபியினர் நேற்று கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் நிலையில் இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியினர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைவது ஏன் என மக்கள் சிந்திக்க வேண்டும். இவர்கள் இருவரும் எங்கு பயணிக்கிறார்கள் என்பது எங்களுக்கு தெளிவாக தெரிகிறது இவ்வாறு பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (நி-6)


## செல்வச் சந்நிதியிலிருந்து கதிர்காமம் நோக்கி பாதயாத்திரை

(தொண்டைமானாறு)

செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையானது எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய ஜெயாவேல் சாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

குறித்த பாதயாத்திரையில் கலந்த கொள்ள விரும்பும் அடியவர்கள் மேலதிக தகவல்களுக்கு 077 838 6381 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியும் என செல்வச்சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை சி.ஜெயராஜ் குழுவினர் அறிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

14

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பௌத்த சமயமும் விகாரைகளும் புனிதமானவையெனக் கொள்ளப்படும், பிரதானிகளின் கௌரவமும் உரிமைகளும் பாதுகாக்கப்படும். எல்லாப் புராதன சட்டங்களும் மரபுகளும் நிலை நாட்டப்படும், எனபிறவுண்றிக் மேலும் உறுதி மொழி கூறினான்.

### கண்டியை ஆங்கிலேயர் வெற்றி கொள்ளல்

பிறவுண்றிக் இவ் விதமாகக் கொடுத்த உறுதி மொழிகளின் பேறாகக் கண்டிமக்கள் ஆங்கிலேயருக்கு எதிர்ப்புக் காட்டாது விட்டனர். பெப்ரவரி 8 இல், ஆங்கிலேயர் மூன்று கோறளையை அடைந்த பொழுது மொல்லிக் கொடை அவர்களைச் சந்தித்துத் தன் திசாவனியை (நான்கு கோறளை) அவர்களிடம் ஒப்படைத்தான்?.

ஆங்கிலேயப்படைகள் யாவும் கனேத்தன்னையில் ஒருங்கு சேர்ந்து பெப்ரவரி14 ஆம் நாள் நகரத்தினுள் புகுந்தன. பிரதானிகளாலும் மக்களாலும் கைவிடப் பட்டு, நண்பர்களையும் அதிகாரத்தையும் இழந்த அரசன், தன் மனைவிமார் இருவருடனும் தமிழ் வீரர் சிலருடனும் நகரத்தை விட்டு ஓடி, குடியானவன் ஒருவனின் குடிசையில் அடைக்கலம் புகுந்தான்.

பிரித்தானியர் இவ்விதமாக இரண்டாம் முறையாக கண்டியைக் கைப்பற்றிய பொழுது அவர்களது நிலை 1803 ஆம் ஆண்டின் நிலையிலும் பார்க்க மிகமிகச் சிறந்ததாகக் காணப்பட்டது. அப்பொழுது அவர்கள் கண்டியினுள் புகுந்த வேளையில் தனித்தும் உதவியின்றியும் தடுமாறினர். ஆனால் இப்பொழுது அவர்களுடன் சென்ற எகெலப்பொலையும் மொல்லி கொடையும் முந்திய பிலிமத்தலாவையிலும் பார்க்கச் சிறந்த நண்பர்களாக விளங்கினர்.

மேலும் கண்டிநாட்டுமக்கள் ஆங்கிலேயரை மனமார வர வேற்றனர். ஜனவரி 10 ஆம் நாள்?. விடுக்கப்பட்ட விஞ்ஞாபனம் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது. மூன்று கோறளை, நான்கு கோறளை, சப்பிரகமுவா ஆகியபிரிவுகள் முறைப்படி பிரித்தானிய மன்னனின் பாதுகாப்பின் கீழ்க் கொண்டுவரப் பட்டன.

பெப்ரவரி 18 ஆம் நாள் , எகெலபொலை, அரசனின் மறைவிடத்தையறிந்து, தன் போர் வீரர்களுடன் அங்கு சென்று வீட்டின் சுவரைத் தகர்த்து உள்ளே புகுந்தனர். அவர்கள், அரசனைப் பிடித்துப் பின் கட்டாய்க்கட்டி, முகத்திலே உமிழ்ந்து, பரிகாசம் செய்து, பின்பு யோண்டி ஒயிலி என்ற ஆங்கில அதிகாரியின் கைகளில் ஒப்புவித்தனர்.

இது நிகழ்ந்து 12 நாட்களுக்குள் (மார்ச் 2 ஆம்திகதி) செய்துகொள்ளப்பட்டது தான் "கண்டி ஒப்பந்தம்" இலங்கையின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஒப்பந்தம். "1815 ஒப்பந்தம் வரலாற்றின் மிகப்பெரும் நாசம்" என்றே சிங்கள ஆய்வாளர்கள் அழைக்கின்றனர்.

கண்டியின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக கண்டி பிரதானிகளும், அதிகாரிகளும் பயன்படுத்திய மிகப் பெரிய ஆயுதம் சிங்களவர் அல்லாத ஒருவர், சிங்களவர்களை ஆள்வதா என்கிற குரோத உணர்வு. இந்த இனவாத உணர்வானது இறுதியில் ஆட்சியதிகாரம் அவர்களுக்கும் கிடைக்காமல் ஒட்டுமொத்த இலங்கை தேசத்திடமும் அன்னியரிடம் பறிபோனது.

ஸ்ரீவிக்கிரமராஜசிங்க அரசனும் அவனது மனைவியரும் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர். சிலமாதங்களின் பின் 1816 ஜனவரி24 ஆம் நாள், கோண்வாலிஸ் எனும்கப்பல் வழியாய் சென்னை இராசதானியைச் சேர்ந்த வேலூருக்கு அவரை அனுப்பினர். அங்கு, அவன் 1882 ஆம் ஆண்டு இறந்தான்.

### ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் பற்றி.....

ஸ்ரீவிக்கிரமன் இயற்கையில் ஒரு கொடூரனல்லன். அவன் விவேகமும் ஆளுமையும் குறைந்தவன், திடசித்தம் இல்லாதவன், ஆற்றலில் குறைந்தவன். அவனைத் தன் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கலாமென்ற எண்ணத்துடன் பிலிமத்தலாவை அவனைச் சிம்மாசனத்திலமர்த்தினான். அவன் அரியணை ஏறிய நாள் தொடக்கம் பிலிமத்தலாவையின் சூழ்ச்சிகள் அதிகரிக்கவே மற்றைய பிரதானிகளின் உதவியுடன், தன் பாதுகாவலனிடமிருந்து பாதுகாப்புப் பெறலாமென அரசன் கண்டான்.

ஆனால் அவன் தன் ஆதரவாளரிலும் ஐயம் கொண்டான் . ஏனெனில் அவர்கள் அவனை ஓர் அந்நியனென்று வெறுக்கவும் , பிலிமத்தலாவையின் மேல் கொண்ட பொறாமையின் காரணத்தினாலேயே அவனை ஆதரிக்கவும் செய்தனர். எல்லாப் பிரதானிகளும் அவனின் பகைவர்களாயிருந்தமையினால் அவர்களை ஒருவரோடொருவர் போரிடச் செய்வதன் வழியாகவே அவன் தன் சிம்மாசனத்தைப் பாதுகாக்கலாமெனக் கண்டான்.

ஆரம்பத்தில் ஸ்ரீவிக்கிரமன், தன் பிரசைகளுக்கு உதவி செய்யவும் அவர்களைப் பிரதானிகளின் கொடூரங்களினின்று பாதுகாக்கவும் முயற்சித்தான். மக்களைக் காப்பதற்கு அவன், பிரதானிகளின் அதிகாரங்களைக் குறைத்தான்.

தம் அதிகாரங்களை இழக்க விரும்பாத பிரதானிகள் பிரித்தானியருடன் சூழ்ச்சிகளில் இறங்கினர். ஸ்ரீவிக்கிரமன், தன் வாழ்நாள் முழுவதையும் பகை, சூழ்ச்சி, சதி, அச்சம், விசுவாச மின்மை எனும் சூழ்நிலையிலேயே கழித்தான்.

பிரதானிகளிடம் கொண்ட அச்சம் அவனை அவர்களைச் சந்தேகக் கண் கொண்டு நோக்கச் செய்தது. சந்தேகம் அவனைக் கொடூரனாக்கிற்று. தனது உறுதியைத் தளராமல் காக்க மதுவை மிகுதியாக அருந்தின். சூழ்ச்சியாளர் எனச் சந்தேகப் பட்டவர்களை இரக்கமின்றிப் பொல்லாத் தண்டனைகளுக்குள்ளாக்கினான்.

கண்டியை கைப்பற்றிய பின்னர் தம் மத்தியிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்து சிம்மாசனத்தில் அமர்த்துவார்கள் என்றே காட்டிக் கொடுப்புக்கு துணைபோன பெரும் பாலான பிரதானிகள் நம்பியிருந்தார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றப்பட்டிருந்தார்கள். "இரு தரப்புக்கும் தேவைப்பட்டது அரசனை வீழ்த்துவது. அது முடிந்துவிட்டது. இனி நீங்கள் போகலாம் என்பதே ஆங்கிலேயர்களின் சைகையாக இருந்தது.

### ஒப்பந்தம்

கண்டி தலைவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களிடம் பணிந்து விட்டதால் அன்றைய, ஆள்பதியின் விருப்பின் பேரில் அதிகாரி டொய்லி ஒரு மாநாட்டைக் கூட்டினார். விமரிசையான அந்த ஏற்பாட்டில் கண்டி பிரதானிகள், அதிகாரிகள், திசாவைகள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு ஏன் கண்டியை கைப்பற்றினோம் என்று விளக்கமளிக்கப் பட்டது. "கண்டிப் பிரதானிகளே கைப்பற்றும்படி அழைத்தார்கள், அவர்களே எங்கள் படைகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்" என்று ஆள்பதி அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

கண்டி ராஜ மாளிகையில் 02.03. 1815 அன்று பி.ப. 4.00இற்கு கண்டி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஜோன் டொய்லியால் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் பிரதானிகள் கையெழுத்திட்டனர். ஆங்கில-சிங்கள மொழிகளில் அது வாசிக்கப்பட்டது. இலங்கை தரப்பில் அந்த ஒப்பந்தம் குறித்து எந்த உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் பின்னர் வெளியிடப்படவில்லை. ஆனால்6 ஆம் திகதி ஆங்கிலேய வர்த்தமானி பத்திரிகையில் முதல் தடவையாக பகிரங்கமாக வெளியி டப்பட்டது.

ஒப்பந்தம் செய்துமுடிக்கப்பட்ட தன் பின்னர் ஆங்கிலேய கொடி ஏற்றப்பட்டது. குண்டுகளையும் துப்பாக்கிகளையும் வெடிக்கச் செய்து தமது வெற்றியைக் கொண்டாடினர் ஆங்கிலேயர்.

அதே நாள் பிரித்தானிய கொடியான "யூனியன் ஜாக்" கொடியை வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் இழுத்து இறக்கி சிங்கக் கொடியை ஏற்றினார். அவர் கைதுசெய்யப்பட்டு அவர் மீது ராஜ்ய துரோக குற்றம் சுமத்தப்பட்டு சிறையிருந்தார். சிங்களவர்கள் மத்தியில் இன்றும் பாடப்புத்தகங்களில் உள்ள நாயகன் அவர். இன்றும் தலதா மாளிகையின் முன்னால் ஆங்கிலக்கொடியை இறக்கி கையில் வைத்திருக்கும் ஒரு சிலை உண்டு.

### தமிழில் வைக்கப்பட்ட கையெழுத்து

இப்போதெல்லாம் ஆங்கிலத்தில் கையெழுத்து வைப்பதை கௌரவமாக நினைப்பதைப்போல அப்போது தமிழில் கையெழுத்திடுவதை சிலர் வழக்கமாக கொண்டிருந்தனர். தமிழை ஓரளவு அறிந்தும் வைத்திருந்தனர். நாயக்க மன்னரின் உறவினர்கள் பலர் அரச சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் தமிழும் வழக்கில் இருந்தது.

ரத்வத்தையின் கையெ முத்து தமிழில் பூரணமாக வைக் கப்பட்ட கையெழுத்து. சிலரின் கையெழுத்து என்ன மொழி என்றே அடையாளம் காண முடியாது உள் ளதை ஆய்வாளர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணொருவரின்...

கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த கனகரத்தினம் ரவிச்சந்திரன் என்ற 34 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,10)

## எதிர்வீரசிங்கம்...

இலங்கையின் முன்னாள் மெய்வல்லுநர் ஜாம்பவான் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தனது 89ஆவது வயதில் அமெரிக்காவில்நேற்றுக்காலமானார்.

உயரம் பாய்தல் வீரரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் 1952 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கேற்றிருந்தார்.

1958ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் பாய்தலில் 1.95 உயரத்திற்கு ஆற்றலை வெளிப்படுத்தி புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றிருந்தார்.

இதன்மூலம் சர்வதேச மெய்வல்லுநர் அரங்கில் இலங்கைக்கு தங்கப் பதக்கம் ஈட்டிக்கொடுத்த முதல் வீரர் என்ற வரலாற்று சிறப்பும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கத்திற்கு உள்ளது.

1962ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பெரியவிளானில் 1933 ஓகஸ்ட் 24ஆம் திகதி பிறந்த இவர் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

பாடசாலைப் பருவத்திலேயே உயரம் பாய்தலில் அகில இலங்கை சாதனையை முறியடித்த பெருமையும் அவருக்கு உள்ளது.

இலங்கை, சியேரா லியோன், பப்புவா நியூ கினியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ள நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் யுனெஸ்கோவிலும் 5 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். (ம-7,10,33)

## மீனவர்...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“இந்திய தேர்தலிற்காக கச்சதீவு விவகாரம் குறித்து தற்போது பேசப்படுகின்றது.

இந்நிலையில், நாட்டுக்குள் வருபவர்களை கண்காணிக்க காண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதுவரை காலமும் இலங்கை கடற்படை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துமீறல்களை கட்டுப்படுத்த கடற்படையினர் எடுத்த நடவடிக்கையை பல்வேறு விதமாக பேசினர்.

ஆனால், இந்தியாவே இவ்வாறு கண்காணிப்பில் ஈடுபட்டால் நிலைமை சிறந்ததாக அமையும். தமிழக முதலமைச்சர் மற்றும் புதுச்சேரி முதலமைச்சர் ஆகியோர் கலந்துரையாடுவதற்காக என்னை அழைத்துள்ளனர்.

அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்துவது தொடர்பில் உறுதியளிக்கும் பட்சத்திலேயே குறித்த சந்திப்பிற்குச் செல்வேன் எனக் கூறியுள்ளேன்.

தமிழகத்திற்கும் இலங்கைக்குமான கப்பல் சேவை குறித்த நடவடிக்கை மீண்டும் இழுபறிக்குள் சென்றுள்ளது. அதனை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படும் பொருட்கள் அருகில் உள்ள பிரதேசங்களை கடந்து கொழும்பிற்கு செல்கின்றன.

அந்தப் பொருட்கள் மீண்டும் யாழ் உள்ளிட்ட பகுதிக்கு கொண்டு வரப்படுகின்றன.

இதனால், வீண் செலவுகள் ஏற்படுகின்றன. அதனைக் குறைக்கவே முயல்கின்றோம்” எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்திற்கும் தமிழகத்திற்குமான சேவையை மேற்கொள்வதில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் விரும்பாமல் தடுப்பதாக கூறப்படுகின்றமை உண்மையா என அமைச்சரிடம் வினவியபோது அதனை அவர் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## மதங்களை...

உருவாகி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதி மரம் பயனற்ற மரம் என ஒரு குறிப்பிட்ட குழுவினர் நாட்டில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு புத்தசாசனம், பௌத்த மதம், மகா சங்கத்தினர் மற்றும் கௌதம புத்தரை அவமதிக்கும் குழுவொன்று நாட்டில் உருவாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவர்களைப் பொறுத்தவரை, விகாரைகளுக்கு உதவிகள் செய்வதும், சிலைகளை வழிபடுவதும் ஏற்கத்தக்கது அல்ல என்று கூறி வருகின்றனர், இது தவறா? என்று மக்களிடம் கேள்வி எழுப்புகிறேன், அவர்களின் கருத்துப்படி, இன்றும் தான் ஒரு பெரிய தவறையே செய்து வருகிறேன், இந்நாட்டில் மத சுதந்திரம் இருக்க வேண்டும். நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்களும் தாங்கள் நம்பும் மதத்தை கடைப்பிடிக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7,10)

## அன்னை...

நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இவ் நினைவேந்தல் நிகழ்வுகளின் போது பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் பங்குகொண்டு அன்னை பூபதிக்கு தங்கள் புகழ் வணக்கங்களைச் செலுத்தியிருந்தனர். (ம-7,10,33)

## அநுர...

யக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கடன் பொறிக்குள் தள்ளிய குற்றச்சாட்டில் இருந்து நாட்டின் ஆட்சிக்கு பங்களிப்புச் செய்த எந்தவொரு அரசியல் கட்சியாலும் விடுவிக்க முடியாது எனவும், அநுர வாங்கிய கடனை தற்போது ரணில் விக்கிரமசிங்க செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜே.வி.பியும் நாட்டை ஆட்சி செய்த காலத்தில் பெற்ற கடன்களை தற்போது ரணில் விக்கிரமசிங்க செலுத்தி வருவதாகவும், தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு நாடுகளில் இருந்து பெற்ற கடனையும் ரணில் விக்கிரமசிங்க செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.04.19
சீட்டிழுப்பு இலக்கம் 5450
U 0 8 4 4 9 3
அத சம்பத U 4 4 9 3
சீட்டிழுப்பு இலக்கம் 25
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1480
C 03 06 11 57 C
Double Chance 21923

மெகா பவர்
திகதி 19/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1798
J 09 27 30 58 75
11539

லக்கி 7 VIP
திகதி 2024.04.19
சீட்டிழுப்பு இலக்கம் 0276
C 0 6 5 3 1 5 C

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3692
சீட்டிழுப்பு திகதி 19.04.2024
W 18 39 40 55
W 35265

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.19
சீட்டிழுப்பு 0759
விருச்சிகம் 10 25 29 34 விருச்சிகம்
44187 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
19.04.2024 வெற்றி வாரம் 158
S 5 7 0 5 3 1
U 19567
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,743,336.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2424 19.04.2024 வெள்ளி
38 49 66 74 Z
22136
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,005,249.60

சனிதா
2024.04.19 வெற்றி வாரம் 4585
05 43 47 48 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,304,525.20
20595

சசிரி
வெற்றி வாரம் 466
2024.04.19
பச்சை
14 43 44
72103
ரூ 3,000,520/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4136 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.04.19 தினம் வெள்ளிக்கிழமை
19 24 28 29 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,253,544.40
143518

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 08 20 51 56 66
1600
19.04.2024 வெள்ளி
617385
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 518,197,154.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2250
2024.04.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.106,977,014.40
55 60 66 71 O
300313
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகுபதி சர்மாவுக்கு டாக்டர் பட்டம்



(யாழ்ப்பாணம்)

பிரம்மஸ்ரீ ரகுபதி சர்மா அவர்களுக்கு குளோபல் பீஸ் பல்கலைக்கழகத்தால் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப் படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெற வுள்ள குறித்த நிகழ்வுக்கு கலாநிதி சரத் சில்வா தலைமை தாங்குவார். (ம-7.10)


## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (C-0175) (ஆங்கில அறிவு அவசியமானது)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0175)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு அனுபவமுள்ள House keeper & Cleaning Staff தேவை.

தொடர்புகளுக்கு :

076 83 03 931

(479)

## வேலையாட்கள் தேவை

பலாலி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் Sola Chemical நிறுவனத்திற்கு யாழ் நகரத்திற்கு அண்மையில் வசிக்கும் ஆங்கில அறிவுடைய கணக்குகளில் அனுபவமுள்ள நிரந்தரமாக வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாள் தேவை. உங்களது சுயவிபரக் கோவையை solachemicaljaffna@gmail.com க்கு 22ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

(507)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 260/= | Max3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 188/= | |
| 1 Kg றவை | - 287/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 165/= | |
| 1 Kg அரிசி மா | - 200/= | |
| 1 Kg மல்லி | - 367/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 720/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 1 Lux றோஸ் சோப் | - 145/= | ~~175/=~~ |
| 450g Nestomalt | - 749/= | ~~780/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 180ml Sunsilk சம்போ மஞ்சள் | - 440/= | ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 54/= | ~~80/=~~ |

400g Anchor புதிய விலையில்

995/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(510)

Happy Supermarket 0777 8080 30


## மரண அறிவித்தல்

### இராசையா நித்தியானந்தன்



மலர்வு 1949.08.31 உதிர்வு 18.04.2024

உரும்பிராய் தெற்கு வேம்பன் வீதியை வதிவிடமாகக் கொண்ட இராசையா நித்தியானந்தன் அவர்கள் 18.04.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் நிமாலினி, நிருபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவநாதன் அவர்களின் அன்பு மாமனாரும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் தர்மரத்தினம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராசா, இராஜேஸ்வரன், சரோஜினிதேவி, இன்பரதி, ஸ்ரீகாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனிஷ், லதுர்ஷன், சதுர்ஷிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 778 9815 (C-0174) தகவல் : குடும்பத்தினர்

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

## நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல்

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையை 2023 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அபிவிருத்தி அதிகாரிகள் குழுவினால் நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

அதன்படி, 2023 மார்ச் 23ஆம் திகதி போட்டிப்பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னதாக உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவால், நடைபெறவிருந்த போட்டிப்பரீட்சை இடைநிறுத்தப்பட்டது.

இந்த மனுக்கள் தற்போது உயர் நீதிமன்றில் நிலுவையில் உள்ளதால், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7.10)

## நாட்டில்...

பொதுச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் நிலையங்கள் கடும் நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரி என்பது உரிமையாளருக்கு கிடைக்க கூடிய சிறிய தொகையில் செலுத்த வேண்டிய வற் வரியாகும். அதற்குரிய வற் தவணைகள் இன்று முதல் செலுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு செலுத்தப்படாது விட்டால் எரிபொருள் நிலையங்களின் அடுத்த கட்டப் பயணங்கள் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும்.

கடந்த 3 மாதங்களாக இந்த பிரச்சினையை தீர்க்க கோரிக்கை விடுத்தோம். எனினும் கலந்துரையாடல் மேற்கொள்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்றிலிருந்து எரிபொருள் நிலையங்கள் கடும் நெருக்கடியை சந்திக்கும்.

இந்த வற் வரியால் சிறிய நிரப்பு நிலையங்கள் கூட 10 லட்சத்திற்கும் அதிக வற் வரி செலுத்த நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7.10)

## இலங்கையில்...

வீரசிங்க ஆகியோரை சந்தித்த போதே ரிக்கார்டோ இதனை தெரிவித்துள்ளார்.

தனியார் துறையின் ஈடுபாடு இலங்கையின் வளர்ச்சியை உயர்த்துவதற்கும் நெகிழ்ச்சியான எதிர்காலத்திற்கு வழி வகுப்பதற்கும் முக்கியமானது என ரிக் கார்டோ தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் சிறந்த பரிமாற்றம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதி வசதி வழங்கும் வகையில், மூன்று தனியார் வங்கிகளின் ஊடாக இலங் கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்ற வசதியை வழங்க சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு உறுதியளித்தது.

இலங்கையின் வளர்ச்சி மற்றும் பின்னடைவிற்கான தனியார் துறை ஈடுபாட்டின் முக்கியத்துவம் பற்றிய தெளிவுபடுத்தலுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது நன்றி தெரிவித்துள்ளார். (ம-7.10)

## கல்வி...

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதில் 735 பேர் தகைமைபெற்று அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 442 பேருக்கு நியமனம் கிடைக்கும் வாய்ப்பு உண்டு என தெரிய வருகிறது. (ம-7.10)

## மின்சார...

சில் நேற்று விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தும் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கான இரண்டு வழிமுறைகளில் இரண்டாவதான நிர்வாகச் செலவைக் குறைப்பதனையே தற்போது மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜே சேகர குறிப்பிட்டார்.

இந்த நிலையில், முறையான ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வின்றி இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (ம-7.10)


## மொத்த கொள்வனவு

400g அங்கர் பால்மா - 990/= மற்றும் யோக்கட் - 54/= மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்



Happy Super market
உரும்பிராய்
077 350 4700

(510)

## வேலையாட்கள் தேவை

- அலுவலக உதவியாளர்
- கணக்கு உதவியாளர்
- தொழில்நுட்ப அலுவலர் - TO
- தொழில்நுட்ப அலுவலர் உதவியாளர் - TA
- கனிய அளவையியலாளர் - QS
- கனிய அளவையியல் உதவியாளர் - A QS

தொடர்பு : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

T.P : 074 112 9148
Email : aonebuilders2001@hotmail.com

(472)

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Power weeder (களை பிடுங்கும்)

6.5 HP டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரங்கள் இப்பொழுது எம்மிடம்.

இது Greaves நிறுவனத்தின் ஒரு தயாரிப்பு

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

(506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.